989

விரோதி ஸு } { ஸம்புடம் 8
சித்திரை மீ } { ஸஞ்சிகை - 4

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 JUN 1949
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

989/9-49

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - APR 1949
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

:ப்ரசுரிக்குமிடம்:
நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு. த்யாகராயநகர்,
சென்னை.

JL
189257

April 1949
Vol. 8 No. 4

விஷய ஸூசிகை.

பக்கம்

1. ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசார்ய லக்ஷணம் ... 94

2. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் 99

3. திருப்பாவை 103

4. பஞ்சாங்க ஸங்க்ரஹம் 106

5. அழகியசிங்கர் காப்பாற்றினார் 107

6. சேஷித்வம் 113

7. செய்திகள் 117

8. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 119

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்சுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 JUN 1949
MADRAS

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 8 | விரோதி ௵ சித்திரை ௴ | ஸஞ்சிகை 4

"𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑍍𑌭𑍂𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌖𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

89257

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

சென்னை 0017

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசார்ய லக்ஷணம்

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி,
ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான், ஸ்ரீரங்கம்]

‘ஆசிநோதி ஹி ஶாஸ்த்ரார்த்தாந் ஆசாரே ஸ்தாபயத்யபி । ஸ்வயமாசரதே யஸ்மாத் தஸ்மாதாசார்ய உச்யதே’ என்றபடி வேதவேதாந்தார்த்த ஜ்ஞாநங்களை ஸம்பாதித்தவராய், வேதோக்தங்களான ஸ்வதர்மங்களையெல்லாம் அநுஷ்டிக்கிறவராய், ஏ தர்மங்களையெல்லாம் பிறரையும் அநுஷ் க்கும்படி செய்விக்கிறவராயிருக்கிறவர் எவரோ அவர் ஆசார்யர் என்று சொல்லப்படுகிறார். இந்த மூன்று கார்யங்களும் சேர்ந்து ஆசார்யருக்கு லக்ஷண மாகிறது. ஒவ்வொன்றும் தனி லக்ஷணமல்ல என்பதற்காக ‘அ’ என்கிற ஶப்தம் இங்கு ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. ‘ஆசிநோதி’ என்கிற பதத்தினால், ‘பல பல ஶாஸ்த்ரார்த்த ஜ்ஞாநங்களை ஸம்பூர்ணங்களாக ஸம்பாதிக்கிறவர்’ என்கிற அர்த்தம் கிடைக்கிறது. ‘ஶாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேஶம்’ என்கிற ச்லோகத்தின்படியே ஆசார்யன் தன் ஆத்மரக்ஷணத்திற்கு வேண்டிய ஜ்ஞாநத்தை மாத்ரம் ஸம்பாதித்துக்கொண்டு த்ருப்தியுள்ளவனாக இருந்துவிடாமல், அதிகமான ஶாஸ்த்ரார்த்த ஜ்ஞாநங்களை ஸம்பாதிப்பது, மனிதன் தனக்கு வேண்டிய ஆஹாரத்தைக் காட்டிலும் அதிக ஆஹாரத்தை ஸம்பாதிப்பது பிறருடைய உபயோகத்திற்காக முடிவதுபோல, இதுவும் பிறருக்கு உபதேசிப்பதற்காக வென்று முடிகிறது. இந்த விஷயத்தை ‘ஆசிநோதி’ என்கிற பதத்தி லிருக்கிற பரஸ்மைபதியான ‘தி’ என்கிற ப்ரத்யயம் தெரிவிக்கிறது. அந்த ‘தி’ என்கிற ஶப்தமானது நிகழ்காலத்தையும் சொல்லுகிறதினால், ‘பரோபகாரார்த்தமாக ஸம்பாதிக்கப்படுகிற ஜ்ஞாநம் ஸர்வ காலத்திலும் ஸம்பாதிக்கப்படலாம்’ என்பதையும் ஸூசிப்பிக்கிறது. இப்படி ஸம்பாதிக்கப்படுகிற ஜ்ஞாநத்தில் ஸ்வாத்ம ரக்ஷணத்திற்கு வேண்டாத அதிகாம்ஶம் பரோபகாரார்த்தமாக ஆனாலும், ஸ்வாத்ம ரக்ஷணத்திற்கு அபேக்ஷித ஜ்ஞாநம் ‘ஶீலவ்ருத்தம் ஶ்ருதம்’ என்கிறபடியே ஸ்வதர்மாநுஷ்டாநத்திற்கு உபயோகப்படுகிறது என்கிற விஷயத்தை ‘ஸ்வயமாசரதே’ என்கிற மூன்றுவது வாக்யம் சொல்லுகிறது. அர்த்த க்ரமத்தை அநுஸரித்து இரண்டாவது வாக்யத்திற்கு முன்பு மூன்றுவது வாக்யம் அநுஸந்திக்கப்படுகிறது. ‘ஆசரதே’ என்பதினால், ‘அநுஷ்டிக்கவேண்டிய தர்மங்களைப் பூர்ணமாக அநுஷ்டிக்கிறான்’ என்றும், ‘அங்கலோபங்க ளில்லாமல் ‘ஸாங்கமாக அநுஷ்டிக்கிறான்’ என்றும், ‘அநுஷ்டிக்க வேண்டிய பல தர்மங்களுக்குள் சில தர்மங்களை விட்டுச் சில தர்மங்களை மாத்

ரம் அநுஷ்டிக்காமல் ஸர்வ தர்மங்களையும் அநுஷ்டிக்கிறான்' என்றும் அநேகார்த்தங்கள் சொல்லப்படுகின்றன. 'ஸ்வயம்' என்பதினால் க்யாதி லாப பூஜாதிகளுக்காக அநுஷ்டிப்பது வ்யாவர்த்திக்கப்படுகிறது. 'ஸ்வ ஸ்வ கர்மண்யபிரதஃ' என்கிறபடியே ஆசையோடு அநுஷ்டிப்பதும், அதிலும் கர்ம பலத்தில் ஆசையின்றிக்கே கர்மாநுஷ்டானத்திலேயே ஆசையோடிருப்பதும் சொல்லப்படுகின்றன. இப்படிப்பட்ட தர்மாநுஷ்டானம் தனக்காக வென்பதை 'தே' என்கிற ஆத்மநேபத ப்ரத்யயம் காட்டுகிறது. நிகழ் காலத்தினால் தர்மாநுஷ்டானம் யாவதாயுஷம் செய்யவேண்டுமென்பதை 'தே' என்கிற ப்ரத்யயமே காட்டுகிறது. இப்படி, அபேக்ஷிதாம்ஶ ஜ்ஞாந பலமான தர்மாநுஷ்டானங்களைச் சொல்லி, அதிக ஜ்ஞாந ஸம்பாதந பலமான பரோபகாரத்தை 'ஆசாரே ஸ்தாபயத்யபி' என்கிற வாக்யம் சொல்லுதால், 'லோகாந்' என்று ஔசித்யத்தினால் சேர்த்துக்கொள்ளவேணும். 'ஶாஸ்த்ரார்த்தாந்'

என்கிற கீழ்ப் பதத்தை அநுஷங்கித்தும் கொள்ளலாம். 'ஆசார' ஶப்தம் தர்மாநுஷ்டானத்தைச் சொல்லுகிறது. இங்கு, 'ஆசாராந் போதயத்யபி' என்று சொல்லவேண்டியதே உசிதமாக இருந்தும், 'ஸ்தாபயத்யபி' என்று சொல்லியிருப்பதால், தர்மாநுஷ்டாந ஸ்தாபந பர்யந்தமான போதநம் விவக்ஷித மென்று தோன்றுகிறது. அதாவது: 'விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம்' என்கிறபடியே வில்லையும் பாணங்களையும் கீழே எறிந்து 'நயோத்ஸ்யே' என்று சொன்ன அர்ஜுநனைக் கீதோபதேசம் கேட்டவுடனே 'கரிஷ்யே வசநம் தவ' என்று சொல்லும்படி விலக்ஷணமாக உபதேசிக்கையைச் சொல்லுகிறது. அன்றிக்கே, ஆசார்யன் தான் உபதேசிப்பது மாத்ர மன்றிக்கே, மற்றவர்களைக்கொண்டு உலகத்திற்குத் தர்மாநுஷ்டாநார்த்தமாக உபதேசிக்கச் செய்வதும், தர்மாநுஷ்டாநார்த்தமாக வித்யாக்ரஹணம் செய்பவர்களுக்கு வாஸஸ்தல ப்ரதாநம் அந்நதாநம் வஸ்த்ரதாநம் முதலியவைகளினால் விசேஷ உபகாரங்களைப் பண்ணுவதும் முக்யமான ஆசார்ய க்ருத்யமென்று தெரிவிப்பதற்காக 'ஸ்தாபயத்யபி' என்று சொல்லியிருக்கிறதென்பது மிகவும் உசிதமாகும். இப்படிப்பட்ட பரோபகாரங்களை ஸ்வப்ரயோஜநங்களான க்யாதி லாப பூஜாதிகளைக் குறித்துச் செய்யாமல் கேவலம் லோகோபகாரார்த்தமாகவே செய்யவேணுமென்கிற விஷயத்தை 'ஸ்தாபயதி' என்கிற 'தி' ப்ரத்யயம் சொல்லுகிறது. இங்கும் வர்த்தமாந காலத்தினால் இந்த பரோபகாரத்தை ஸர்வ காலத்திலும் செய்யலாம் என்றும், 'ஸ்வஜ்ஞவ்யபிரக்ஷதி' என்கிறபடியே ஆசார்யன் இந்த உபகாரத்தை அவச்யம் செய்யவேண்டுமென்றும், த்ரவ்ய மூலகமான உபகாரத்தினால் த்ரவ்யம் குறைந்துபோகிறதுபோல ஜ்ஞாநோபகாரத்தினால் ஜ்ஞாநம் குறைந்துபோகிறதில்லை என்பதும் ஸூசிக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட ஆசார்ய கார்யங்க ளெல்லாம் நம் அழகியசிங்கரிடம் ஸம்பூர்ணமாக விளங்குவதை இங்குத் தெரிவிக்கிறோம். ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்வாத்ம ஸம்ரக்ஷணாபேக்ஷிதமான ரஹஸ்ய த்ரய ஜ்ஞாந மாத்ர ஸம்பாதந த்ருப்தரா யிருக்கை யன்றிக்கே, அநபேக்ஷிதங்களான தர்க்க வ்யாகரணாதி ஸாமாந்ய ஶாஸ்த்ர ஜ்ஞாநங்களைக் குடந்தை மைஸூர் காசீ முதலான தேசாந்த

ரங்களில் அதிகமாக ச்ரமப்பட்டுப் பரோபகாரார்த்தமாகவே ஸம்பாதித்த தினலும்,

“ சுஹிறஜ்ஹு ஹஸிம் வூாதஃ வஹ்ாஉவ்ாணி அாஜஷயது ।
சுஅஷயம்ஹு தடுதா ஜெவம் தடுதா ஐம்த்ாது ஜவஹவி ॥
யூாயஹவி வாஶ ஜெவம் காமெஷஷிதெ்ஷு வம்அவ ॥ ”

என்கிறபடியே ஸ்வதர்மானுஷ்டாநத்திலும் பஹு ச்ரத்தராய், ‘ ஸ்கஉஷணா த ஊஹூஅஷூ’ என்கிறபடியே கேவல பரமபுருஷாராதநமாக ஸ்வதர்மானுஷ்டானத்தைப் பூர்ணமாகப் பண்ணுகையினுலும், ஆஶரீராத் ஶாரீரக ப்ரவசந வ்ரதத்தை நித்ய ததீயாராதநாதி உபகாரங்களோடு அநுஷ்டிப்பதோடு, அநுதிநமும் அவரவர் அநுஷ்டிக்க வேண்டிய ஸகல தர்மங்களையும் கேட்ட மாத்ரத்தினலே அநுஷ்டாந ப்ரவ்ருத்தி யுண்டாகும்படி செவிக்கினிய செஞ்சொல்லான ஸரள ம்ருதுள ஸூக்திகளாலே உபந்யஸிப்பதோடு, அதிவிஶால வித்யாஶாலா ஸ்தாபந வித்வத் ஸபாநுஷ்டாந விலக்ஷண பத்ரிகா ப்ரேஷணுதிகளினலேயும் இவ்வுலகத்தில் ஆசார ஸ்தாபநத்தைக் செய்விப்பதாலும், ஸ்ரீ அழகியசிங்கரிடத்தில் ஆசார்ய லக்ஷணங்கள் பூர்ணங்களாக இருக்கின்றன.

மற்றும் ‘ஸிஜ்ஹம் ஸகஸம்வூஷாயெ’ என்று ஸ்ரீ தேசிகனல் அருளிச் செய்யப்பட்ட அநேகாசார்ய லக்ஷணங்களுக்குள் இம்மூன்றும் ப்ரதாநமானவை. ‘ஞூஅிநோதி’என்கிற ச்லோகத்தில் இவை மூன்றும் சொல்லப்பட்டன. இவை ஸ்ரீ தேசிகனல் அருளிச்செய்யப்பட்ட அந்தத் தர்மாந்தரங்களுக்கும் உபலக்ஷணங்கள்.

“ ஜ்ஞாநஹீநம் ஶுஶஶம்வூாவஜீ கூஶெதா ஜொகூஉவாநுஶயாக ।
ஹிஶநாவாஸ்ரீதஹுஸெ்யா யயா வாஶஹ ஶஜ்ஹதி ॥’

என்கிறபடியே ஆசார்யனுக்குத் தத்வஜ்ஞாநம் அவச்யமானுலும், ‘ ஶஶ நஃ வஶஜ்ஹுெவா நயஷம் வாணிதஜ்ம் யஉஷவஜிஷதம் ’ என்று அவனுக்குத் தர்மாநுஷ்டாநமும் அவச்ய மானுலும், இவ்விரண்டையும் காட்டிலும் ‘ ஸாகூாஹாஶாய ணொ ஜெவஃ’ ‘வஶிவெஷா தஹெஷஶ’ என்கிற வசநங்களின்படியே ஆசார்யனை லோக ரக்ஷணுர்த்தமான ஈச்வரனுடைய அநுப்ரவேஶாவதாரமாக நிச்சயிக்க வேண்டியதாக இருப்பதால், இப்படி, ஆசார்யனுடைய ஜந்ம ப்ரயோஜநமான லோகரக்ஷணம் ‘ தாநாஅாயெஷாவஜெஶஃ வாஶயதெ’ என்கிற கௌதம ஸூத்ரத்தின்படியே உபதேசத்தினலேயே ஸாத்ய மாகையினல் இம்மூன்றுகளுக்குள் ‘ஞூவாஜெஹாவயதஜவி’ என்கிறதே ப்ரதாநம் என்கிற திருவுள்ளத்தினல் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன், ‘இத்தத்வஹித புருஷார்த்தங்களில் தெளிவும் துணிவும் த்வரையும் உண்டாகும்படி மூலமந்த்ராதிகளாலே ஸம்யக்காக உபதேசித்தவன் ப்ரதாநாசார்யன்’ என்று அருளிச்செய்தார். இந்தத் தேசிக ஸ்ரீஸூக்தியைப் பராமர்சித்தால்,

‘ சுவூவதூாஶ ஊஅாயஷஉநயீயா நஜூகூவிஜழ ।
சுஶகூிதாஶம் ஶாஜாநம் ஹாயஷாம் அாவியவாதிநீழ ॥’

என்கிறபடியே உபதேசிக்கத் தெரியாத ஆசார்யனை விட்டுவிடும்படி சொல்லு வதால், அவனைக்காட்டிலும் உபதேசிக்கத் தெரிந்த ஆசார்யன் ப்ரதானன். அப்படித் தெளிவாக உபதேசிப்பவனைக்காட்டிலும் உபதேசிக்கப்படும் விஷயங் களை ரஹஸ்யத்ரயங்களுடைய தாத்பர்யமாகக் காட்டி நன்ருக உபதேசிப்ப வன் ப்ரதானன். அப்படி ரஹஸ்யத்ரயார்த்தமாக உபதேசிப்பதிலும். தன்னு டைய உபதேசத்தினுல் தெளிவும் துணிவும் த்வரையு முண்டாகும்படி உபதேசிப் பவன் ப்ரதானன். அப்படி தெளிவும் துணிவும் த்வரையும் உண்டாம்படி செய் கிற உபதேசத்தைத் தத்வ ஹித புருஷார்த்தங்கள் விஷயத்தில் பண்ணுமவன் அவனைக்காட்டிலும் ப்ரதாநாசார்யன் என்று திருவுள்ளமென்று தோன்றுகிறது.

இங்கு, சிஷ்யன் புத்திமானுக இருந்தால் அவனைக் குறிக்க உபதேசிக் கிற ஆசார்யன் ஓர் அரிய விஷயத்தை கூடப் பல தடவை உபதேசிப்பதாலும், பல விதங்களாக உபதேசிப்பதாலும், சிஷ்யனுக்கு அவ்விஷயத்தில் தெளிவை உண்டாக்குவது ஸம்பாவிதம். இவ்வுலகத்தில் இக்காலத்தில் பற்பல புத்திமான் களுக்கு ஶாஸ்த்ரார்த்தங்களில் தெளிவு இருந்தும், அதில் நம்பிக்கை இல்லா திருப்பதைப் பார்ப்பதாலும், மற்றும் அநேக மனிதர்களுக்கு ஶாஸ்த்ரார்த்தங் களில் நம்பிக்கை யிருந்தும் உபாயாநுஷ்டாநத்தில் த்வரை இல்லாமலிருப்பதை நாம் பார்ப்பதாலும், துணிவும் த்வரையும் உண்டாகும்படி ஆசார்யன் எப்படி உபதேசிக்கக்கூடு மென்று சிலர்க்கு ஸந்தேஹம் ஜனிக்கலாம். இதற்கு ஸமா தானம்:— ப்ரபலமான ப்ரதிபந்தக மில்லாத விஷயத்தில் ஆசார்யனுடைய உப தேச வைலக்ஷண்யத்தினுல் சிஷ்யனுக்குத் தெளிவும் துணிவும் த்வரையு முண் டாகலா மென்பதே ஸ்ரீதேசிகனுடைய திருவுள்ளமாகும். உபதேசத்தில் வைலக்ஷண்யமாவது: உபதேசாதிகாரியான சிஷ்யனிடத்திலும், உபதேசிக்கப் படுகிற விஷயத்திலும், உபதேச ரூபமான வ்யாபாரத்திலும், ஆசார்யன் அளவில் லாத ஆதரம் தோன்றும்படி உபதேசிக்கை. இந்த வைலக்ஷண்யங்களை ஸ்ரீ கீதாசார்யனுடைய கீதோபதேசத்திலும் நம் ஸ்ரீ அழகியசிங்கருடைய உபந்யா ஸோபதேஶத்திலும் வ்யக்தமாகக் காணலாம்.

கீதாசார்யன் சிஷ்யனுன அர்ஜுநனிடம் ஆதரம் தோற்ற உபதேசித் ததை, ‘பக்தோஸி மே ஸகா சேதி’ ‘இஷ்டோஸி மே த்ருடமிதி’ ‘அநஸூயவே’ என்றும், ‘ப்ரியோஸி மே ஹிதம் வக்ஷ்யாமி’ ‘மா ஶுச:’ என்றுமுள்ள வசநங்க ளில் காணலாம். விஷயத்தில் ஆதரத்தை,

‘நேஹாபிக்ரமநாஶோஸ்தி’ ‘யே மே மதமிதம் நித்யமநுதிஷ்டந்தி’।
ஶ்ரத்தாவந்தோऽநஸூயந்தோ முச்யந்தே தேபி கர்மபி: ॥’
‘இதம் து தே குஹ்யதமம்’ ‘அஶ்ரத்ததாநா: புருஷா:’ ‘ராஜகுஹ்யம் ।’
‘ஜிஜ்ஞாஸுரபி யோகஸ்ய’ ‘ஸர்வகுஹ்யதமம் ।’

என்னும் வசநங்களிலும், ‘ஶ்ருணுயாதபி யோ நர:’ என்கிற வாக்யத்திலும், ‘நதபஸ்காய நாஶுஶ்ரூஷவே கஶ்சித்ப்ரியக்ருத்தம:’ என்கிற வாக்யத்திலும் காண லாம்.

உபதேசத்தில் ஆதரத்தை,

‘𑌭𑍂𑌯 𑌏𑌵 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌹𑌿𑌤𑌕𑌾𑌮𑍍𑌯𑌯𑌾 ।

‘𑌸𑌰𑍍𑌵𑌗𑍁𑌹𑍍𑌯𑌤𑌮𑌂 𑌭𑍂𑌯𑌃’ ‘𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌾𑌨𑍀𑌹𑌿 ।’

‘𑌮𑌾𑌮𑍇𑌵𑍈𑌷𑍍𑌯𑌸𑌿’ 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑌾𑌨𑍇’

𑌅𑌥 𑌚𑍇𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌹𑌂𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌨 𑌶𑍍𑌰𑍋𑌷𑍍𑌯𑌸𑌿 𑌵𑌿𑌨𑌙𑍍𑌕𑍍𑌷𑍍𑌯𑌸𑌿 ॥

𑌸𑌰𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌾𑌨𑍍𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯............𑌮𑌾 𑌶𑍁𑌚𑌃 ।’

என்கிற வசநங்களினுலும் காணலாம்.

இப்படி மூன்று வித வைலக்ஷண்யங்களும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய உபதேசங்களிலும் வ்யக்தமாக இருப்பதை ப்ரத்யக்ஷமாகக் காணலாம். ஸ்ரீ அழகிய சிங்கரால் உபதேசிக்கப்பட்ட புத்திமான்கள் தத்வஹிதாதிகளில் தெளிவும் துணிவும் த்வரையுடனு மிருப்பதாலும், இவ்வைலக்ஷண்யங்கள் அநுமேயங்களாகவும் ஆகின்றன. ஆசார்யனுடைய விலக்ஷணமான உபதேசத்தினுல் சிஷ்யனுக்குத் தெளிவுண்டானதை முன்பு ‘𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌮𑍂𑌢𑌚𑍇𑌤𑌾𑌃’ என்று சொன்ன அர்ஜுநன் ‘𑌨𑌷𑍍𑌟𑍋 𑌮𑍋𑌹𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌗𑌤𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑌃’ என்று சொல்லுவதால் அறியலாம். உபதேசிக்கப்பபட்ட விஷயத்தில் நம்பிக்கை உண்டானதை முன்பு ‘𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯 𑌸𑌶𑌰𑌂 𑌚𑌾𑌪𑌮𑍍’ என்கிறபடியே வில்லையும் அம்பருத் தூணியையும் கீழே எறிந்து ‘𑌨 𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯𑍇’ [யுத்தம் பண்ணமாட்டேன்] என்று சொன்னவன் தானே ‘𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑍇 𑌵𑌚𑌨𑌂 𑌤𑌵’ என்று சொன்னதால் அறியலாம். மனதில் நம்பிக்கை உண்டான பிறகன்றே வாயினுல் கார்யத்தைச் செய்கிறேன் என்று சொல்வது? செய்யவேண்டிய கார்யத்தில் த்வரை உண்டானது ‘𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑍇’ என்று சொல்லுவதால், த்வரையும் தோன்றுகிறது.

ஆக: இதைப் போலவே ஸ்ரீ அழகியசிங்கருடைய உபதேச வைலக்ஷண்யாதிகளினுலும் சிஷ்யர்களுக்கு இந்த மூன்று குணங்களும் உண்டாகியிருப்பது ப்ரத்யக்ஷ ஸித்தமாக இருப்பதால், ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்தபடி ஆசார்ய ப்ராதாந்யமும் ஸித்தமாக ஆகிறது.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌶𑌠𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑌦𑍍𑌗𑍁𑌣𑌾𑌕𑌰𑍍𑌷𑌚𑍇𑌤𑌸𑌾 ।

𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑍇𑌣 𑌸𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌾𑌰𑍍𑌯𑌾 𑌸𑌮𑌰𑍍𑌪𑌿𑌤𑌾 ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(எட்டாம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி]

நாரதர்:— [தூரத்தில் வரும் தூதனைப் பார்த்து], மஹாராஜனே!

" அமுவ-ா-வ-ா-ஶாஶுாஶ்லேஷவா தாமுஜம்வ:
ஶுஜவ நிரவாயஸ்வாா- அண்வா தகஸ்ரீ: ।
சுயதிஹ ா-திராஹி: ஸ்ஹ்ரீா-ஞஸஶளஸி:
க்ஷரி தஶ-வஸெதி ஸ்வெதுஹிஞ: ஸ-ஹஸி: ॥ "

[அந்நாளில் கடிதம் கொண்டுவரும் தபால்காரர்களை ஹர்ஷ சரிதாதி காவ்யங்களில் வர்ணித்துள்ள முறையில் இந்தத் தூதனையும் ஸ்வாமி வர்ணிக்கிறார்.] அவர்கள் சல்லடத்தை (சண்டாதகத்தை) இறுகக் கட்டியிருப்பர். மணிகள் கட்டியிருக்கும் கால் சலங்கைகள் சப்திக்க ஓடிக்கொண்டேவருவர். இவன், 'குரு குரு' வென்று வென்று ஒலிக்கும் மணிச் சங்கிலி கட்டிய கால்களால் பாண வேகத்துடன் தட்டுத் தடங்க லில்லாமல் பாய்ச்சலாக அழகிய சல்லடத்தால் விளங்கும் குழந்தைகளோடும், வாஸனைப் பூமாலைகளால் முடிந்த தலைமயிருடனும், உடம்பு வேர்வை பெருகியிருந்தாலும் புஷ்ப ஸுகந்த வீச்சோடு ஓடி வருகிறான். [இரவிலும் ஓடுவதால், காலில் மணிச் சலங்கையின் ஒலி பூச்சிகளை அகலச்செய்யும். சல்லடம் இறுக்கிக் கட்டியிருக்கிறது ஓடுவதற்கு ஸௌகர்யம். 'ஶு ஜவ நிரவாய:' என்பது, ராம தூதரான ஹநுமார் ராவணன் இலங்கைக்கு மஹேந்த்ர பர்வ த்திலிருந்து பாய்கையில்,

" யதா ராவலநிஶு-க்த: ஶு: ஶ்வஸநவிக்ரம: ।
ஹச்ச தத்வதிஷ்யாமி லங்காம் ராவணபாலிதாம் ॥ "

என்று கூறிய ஸாத்விக ஸங்கல்பமான ச்லோகத்தை நினைப்பூட்டுகிறது. மஹாமோஹனை ஸ்வாமி ராவணனுக்கும் துர்யோதநனுக்கும் கம்ஸனுக்கும் ஒப்பிடுகிறார். மகிழம்பூ முதலிய லேசான மாலைபால் குடுமியைக் கட்டினால் குடுமி அவிழ்கையில் ஓட்டத்தின் வேர்வை நாற்றமும் ஸுகந்தத்தால் தணியும். 'ஸ்வெதுஹிந: ஸ-ஹஸி:' என்று இது தெளிவாகக் கூறப்படுகிறது.

இவனை யாரென்று விசாரிக்கவேணும்; விபசரிக்கவேணும். ஸுந்தர காண்டம் 5-வது ஸர்க்கத்தில், ராவணன் ப்ரஹஸ்தனைக்கொண்டு ஹநுமாரை விசாரிக்கச் சொல்லுகையில், 'வரஜ்ஞ தாமேஷ து ஊமதி:' என்றான். மஹாத்மாவான ராமதூதரை 'துர்மதி' என்றான் மஹாமோஹ ராவணன். இங்கே மஹாமோஹனுடைய பத்நீ துர்மதி, ராவணனுடைய விபரீத மோஹத்தால் ஹநுமாரைத் 'துர்மதி' என்றாள். ஆனால் ப்ரஹஸ்த மந்த்ரி ராமதூதனை 'ஸமாஶ்வஸிஹி ஹத்ரம் தெ ந பீ: காயா த்வயா கபெ' என்று ஆச்வாஸநத்துடன் தொடங்கி, 'ஸமஸ்தே ஹயம்' 'ந ஹிதெ வாநரம் தெஜ ரூபமாத்ரந்து வாநரம்' என்று உபசார பஹுமான வசநங்களையும் கூறினான். 'விவேக ராஜர் தூதன் 'விசாரணீயன் அன்று; உபசாரணீயன்' என்பதால், நாரதர் தூதோபசார தர்மத்தை விளக்குகிறார். விசாரணீயன் என்பதுகூட சரியல்ல; உபசரிக்க வேண்டியவனென்னும் முறையைக் காட்டுகிறார். ஸுந்தர காண்ட வ்ருத்தாந்தத்தையும் ஸூசிக்கிறார்; நாரதர் உலகத்திற்கு அளித்த செல்வம் ராமாயணம்.

மஹாமோஹன்:— உபசாரம் கிடக்கட்டும்; விசாரிப்போம்.

தூதன்:— (அருகே அணுகி) இதோ (எம்) மஹாராஜருடைய ஶாஸநம். [என்று சொல்லிக்கொண்டு ஓலைக் கடிதத்தைக் காட்டுகிறான்.]

மஹாமோஹன்:— (ஏகாந்தமாக) மஹாமோஹநுக்குக்கூடக் கட்டளையிடுபவனுண்டோ ?

நாரதர்:— பிறர் வேலைக்காரர்களுடைய பேச்சு முறையைப்பற்றி நாம் ஏன் கவனிக்கவேணும் ?

மஹாமோஹன் :—அப்பா ! உள்கங் த்வீப எழுத்து எங்களுக்குத் தெரியாது; நீயே வாசி. [தேசங்கள் தோறும் லிபிகள் பாஷைகள் வேறு. புறத் தேசங்களுக்குத் தூத ப்ரதிநிதியாகச் செல்பவர் அந்தத் தேச பாஷைகளைக் கற்றவரா யிருத்தல்வேண்டும். கடிதங்களும் பரதேச பாஷைகளில் எழுதப்படுவது ஸௌகர்யம். இங்கே பாஷை ஒன்றானாலும், எழுதும் லிபி வேறாயிருப்பதைக் கூறுகிறார். ஹிந்தி பாஷையை நாகரி லிபியிலும் உருது லிபியிலும் எழுதுவதுபோல.]

தூதர்:— [ஓலையைப் பிரித்து வாசிக்கிறார்] 'ஸ்வஸ்திஸ்ரீ:—ச்வேத த்வீபத்தில் விஹார மண்டபத்தில் வீற்றிருக்கும் தேவ பூஜிதரான விவேக மஹாராஜரால் மஹாமோஹருக்கு அனுப்பிய கடிதம்:—' நீசா: கலஹமிச்சந்தி ஸந்திமிச்சந்தி ஸாதவ: ' [துர்ஜநரான அல்பர்கள் கலஹத்தை விரும்புவர்; ஸாதுக்கள் ஸமாதாநத்தை விரும்புவர்] என்பது ப்ரஸித்தம்தானே.

மஹாமோஹன் :— இதனால் என்ன ஏற்பட்டது ? தன் நீசத்தனத்தை தானே ஸூசித்ததாகிறது.

துர்மதி:— அதற்குமேல்—[தூதன் வாசிக்கிறான்]

“ தீயதாமிஹ தக்ஷிணாவதி ஹந்தவோ யாவதக்ஷயோர்தய:
தத்ர ஸ்தாவரத்யஜம் ஸர்வமேவ ஹந்த்வ த்வவ்யக்ஷத: ।
உத்தம் நாம கலஹக்ஷயோபஸமநோபாயே த்வயா தஸ்யஷா
ஸம்யிஸ்த்ய மிராம தஸ்ஸம நஸாமஸ்ஸா கநாமஸ்ஸநஸ: ॥ ”

கலியுகம் தீரும் வரையில் தென்தேச ஜநங்களை எங்களிடமே விட்டுவிட வேணும். அவர்களை நீங்கள் நெருங்கக்கூடாது. கலியுகம் முடிந்து க்ருத யுகம் வந்துவிட்டால், மஹாமோஹனுக்கு ப்ரபாவமே யிராது. அநேகமா யெல்லோரும் மோக்ஷ தர்மத்திலேயே நிற்பர். ‘க்வசித்க்வசிந் மஹாபாகா த்ரவிடேஷு ச பூரிஸ:’ என்று மஹர்ஷி பாடியபடி கலியிலும் தென்னுட்டில் ஸாத்விகப் பெரியோர்கள் அவதரித்து அவர்கள் ப்ரபந்தங்களால் ஜநங்கள் பகவத் ப்ரவணரா யிருப்பர். மற்றை யிடங்களில் அப்படி யிராது; அவர்களைத் திருப்புவது கஷ்டம். ப்ரபோத சந்த்ரோதயத்தில் ராஜா மஹா மோஹனுக்கு இப்படி ஒரு ஸமாதாநப் பேச்சு அனுப்புகையில் ‘விஷ்ணாயதநாநி வாஸ்ய’ [விஷ்ணு கோவில்க ளிருக்கும் திவ்ய க்ஷேத்ரங்களில் நீ நுழையக்கூடாது] என்று நிபந்தனை அனுப்பினதையும் ஸ்வாமி இங்கே ஸூசிக்கிருர். விஷ்ணு கோயில்கள் தென்னுட்டில் மிகுதி. ஸ்ரீ பாகவதத்தில் கலியுகாரம்பத்தில் பரீக்ஷித்து மஹாராஜர் கலியின்பேரில் அம்பை எய்து கொல்லப்போகையில், கலி அவரை ஶரணம் புகுந்து, ‘எனக்கு எதாவது இடம் ஒதுக்கிவிடவேணும்’ என்று கேட்க, ‘த்யூதம் பாநம் ஸ்த்ரிய: ஸூநா யத்ராதர்ம: சதுர்வித:’ என்று ஐந்து இடங்களைக் கொடுத்தாரென்று பாகவதத்தில் கூறியதையும் இங்கே நினைக்கவேணும். ‘தீயதாம்’ ஸமாதாநமாய் முடிய வேணு மென்ற ஆசைமிகுதியால் யாசிப்பதைப்போல் கேட்கிருர். கண்ணன் துர்யோதநனுடைய ஸபைக்குப் பாண்டவ தூதனாகச் சென்றபோது ‘ஶமம் யாசிதுமாகத:’ என்று துர்யோதநனிடம் வார்த்தை. ஶாந்தி ஸமுத்ரமான பெருமாள் ஶாந்தியை யாசித்துக் கேட்பது அவன் ஸ்வபாவத்திற்கு உசிதமே. நாம் வாழவேண்டி நம்மை நல்வழியில் இருக்கும்படி அவர் யாசிக்கக் கூச மாட்டார். நம் இரு கைகளால் அஞ்ஜலியை அவர் யாசிப்பவர். ‘தத்ர ஸ்தாவரஜங்கமம் ஸர்வமேவ ஹந்த ஸ்வக்ஷ த்வவ்யக்ஷத:’ தென்னுடுகளிலும் முழு ப்ராணிகளையும் என்னிடம் விடச் சொல்லவில்லை. ஸ்தாவரமான வ்ருக்ஷங்கள் உமக்கே இருக்கட்டும். வ்ருக்ஷங்கள் தமோகுணம் நிரம்பினவை. மஹாமோஹன் தமோ குணமே வடிவெடுத்தது போன்றவன். மோக்ஷ ஶாஸ்த்ரம் மநுஷ்யாதிகாரம். திர்யக்குகளுக்கு மோக்ஷாதிகார மில்லை. வ்ருக்ஷங்களையும் ஜந்துக்களையும் மஹா மோஹனுக்கு விட்டுவிடுவதில் யாதொரு நஷ்டமு மில்லை யென்று ரஸம். இவை யெல்லாம் ஒரே தமோகுண பூர்த்தியால் மஹாமோஹன் வஶமாயிருப்பதே ஸ்வபாவம். ஸ்தாவரங்களும் கால் நடைகளும் உன் அம்ஶத்திற்கு (பாகத் திற்கு) இருக்கட்டும். ‘ஸ்வபத்ரம்’ என்று பாக பத்ரத்துக்குப் பெயர். ‘அக்ஷத:’ எங்களால் ஹிம்ஸை யில்லாமல் நீ ஸுகமாகப் புஜிக்கலாம். ‘உத்தம் நாம கலஹக்ஷயோபஸமநோபாயே த்வயா தஸ்யஷ’ அண்ணன் தம்பிச் சண்டையாகிய பாரத யுத்தாரம்பத்தில் ‘கலஹக்ஷயக்ருதம் தோஷம்’ என்பது

18925

அர்ஜுனன் பேச்சு. புருஷ புத்தியிலிருந்து ஸாகோபஸாகமாய்க் கிளம்பியுள்ள குணங்களும் தோஷங்களுமாகிய ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நாம், குலத்திற்கு அழிவில்லாமலும் அவரவர்களைச் சேர்ந்த ஸாத்விக தாமஸ ஜனங்களை ஆண்டு கொண்டு வாழ்வது நலமென்று ஸமாதானப் பேச்சு.

மஹாமோஹன்—[கைகொட்டிச் சிரித்து] பிறவிச் செல்வமாக உலக முழுதும் ஆண்டுவரும் எனக்கு, ஆட்சியே யில்லாத பேதை விவேகன் ஐச்வர்யப் பிச்சை யாசிப்பதாகப் பேசுவது, ஆயிரம் கிரணராகிய ஸூர்யனுக்கு வெளிச்ச வரம் கொடுப்பதுபோலவும், குபேரனுக்கு த்ரவ்யப் பிச்சை கொடுப்பதுபோலவு மிருக்கிறது.

நாரதர்:—[உள் சிரிப்புடன் ஏகாந்தமாக] என் காட்சிகளுக்குப் பட்டினி தீர்க்கும் பாரணை மகிழ்ச்சி இதோ கிடைக்கப்போகிறது. எவ்விதத்திலும் விவேகருக்கும் மஹாமோஹனுக்கும் ஸமாதானம் நடப்பதைத் தடுத்து விடுகிறேன். [அந்யாயத்திற்கும் ந்யாயத்திற்கும் ஸமாதானம் செய்யப் பார்த்தால் அது மிகுந்த அநர்த்தத்தையே விளைவிக்கும். அஸத்யத்திற்கும் ஸத்யத்திற்கும், அதர்மத்திற்கும் தர்மத்திற்கும் எப்படி ஸமாதானம் கூடும்? ந்யாயம் அந்யாயத்தை அடியோடு ஜயித்து அழிக்கவேணும். இரண்டும் கூடி ஸமாதானமாக வாழ முடியாது. ஒன்றுக்கொன்று கொஞ்சம் விட்டுக்கொடுத்துக் கொண்டு இரண்டு ஜீவிக்க முடியாதென்பது முதல் அங்கத்தில் விவரிக்கப்பட்டது. முடிவிலும் இதை ஸ்வாமி இங்கே எடுத்துக் காட்டுகிறார்.]

[ப்ரகாசமாக சிரஸ்ஸை ஆட்டிக்கொண்டு வருத்தப்படுவதுபோல்] இதென்ன விந்தை! புருவங்களைப் பல விதமாய் நொடிப்பதாலேயே எவருக்கு உலகமெல்லாம் கீழ்ப்படிந்து நடக்கிறதோ, ஸம்ஸாரம் தோன்றியது முதல் எவருடைய ஆஜ்ஞையை ஒருவரும் மீறுவதில்லையோ, பிறந்தது முதல் ஒரே தீரனாக எவர் தலைவணங்காம லிருந்து வருகிறாரோ, ப்ரஹ்மதேவர் முதல் புழு ஈறாக எல்லா ப்ராணிகளும் எவருக்கு வசப்பட்டிருந்து வருகிறார்களோ, எவர் தம் தகப்பனாரான ஸம்ஸாரி ஜீவனுடைய ஸம்ஸாரி ஜீவத்தன்மைக்கு த்ரோஹமில்லாமல் நடந்து வருகிறாரோ, அந்த ஜகதேக ராஜாவான மோஹர் என்னும் உம்மிடம் உம் ஸத்ரு யார்தான் ஸமாதானம் செய்யும் பேச்சை ப்ரஸ்தாவிக்க முடியும்?

துர்மதி:—பர்த்தாவே! ஸமாதானம் பேசுகிறோமென்று ஆசை வார்த்தைகளைச் சொல்லி யழைத்துவந்து, விவேகரை உயிரோடு பிடித்து நசுக்கிவிடுவது ராஜநீதி முறையென்று எனக்குத் தோன்றுகிறது. என்ன சொல்லுகிறீர்?

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருப்பாவை

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, அட்வோகேட், திருப்பாப்புலியூர்]

பகவானை ஸ்தோத்ரம் பண்ணும் ஸந்தர்ப்பத்தில் இவ்வாறு தங்களுடைய மநோரதத்தைப் பூர்த்தி செய்யவேணு மென்று பொதுவாக விண்ணப்பம் செய்து, அநுபதம் அதன் விவரத்தை ப்ரஸ்தாவம் செய்கிறார்.

26. மாலே ! மணிவண்ணா ! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலி னிலையா யருளேலோ ரெம்பாவாய்.

[பதவுரை] மாலே—பகவானே ! மணிவண்ணா—இந்த்ர நீலம் போன்ற திருமேனி யுடையவனே ! ஆலின் இலையாய்—ஹே வடபத்ரசாயியே ! மார்கழி நீர் ஆடுவான் மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்—பெரியோர்கள் அநுஷ்டாநப்படி மார்கழி நீராட்டத்துக்கு அவச்யமான உபகரணங்கள் என்னவென்று நீ கேட்டால்; ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன—பூலோகம் முழுவதும் நடுங்கும்படி சப்திக்கிற, பால் அன்ன வண்ணத்து—பால்போல் வெண்மையான நிறமுள்ள, உன் பாஞ்சசன்னியமே போல்வன—உனது ஸ்ரீ பாஞ்சஜந்யத்துக்கு ஸமாநமான சங்கங்கள், போய்ப்பாடு உடையனவே சாலப் பெரும்பறையே — விசாலமானதும் கம்பீர நாதமுடையதும் பெரியதாகவு மிருக்கும் பேரி வாத்யம், பல்லாண்டு இசைப்பாரே—உனக்குப் பல்லாண்டு பாடும் வந்தி கோஷ்டி, கோல விளக்கே—மங்கள தீபங்கள், கொடியே—த்வஜங்கள், விதானமே — மேற்கட்டுகள், ஆகிய இவைகளை, அருள்—நீ எங்களுக்கு அநுக்ரஹம் செய்யவேண்டும்.

இப்பாசுரத்தில் ஆண்டாள் ஸ்ரீ வடபத்ரசாயியை ஸ்ரீ க்ருஷ்ணனாக அத்யவஸித்து, திருவாய்ப்பாடியில் கோபகந்யகைகள் மார்கழி மாஸத்தில் அநுஷ்டித்த வ்ரத விசேஷத்தை மாநஸிகமாகத் தாம் ஸ்ரீ வில்லிபுத்தூரில் அநுஷ்டித்ததாகப் பாவனை செய்து அவ்வ்ரதத்தைப் பூர்த்திசெய்துதரவேணு மென்று பெருமாளை ப்ரார்த்திக்கிறார். இது 'ஆலி னிலையாய்' என்கிற ஸம்போ

நத்தால் வ்யஞ்ஜிதமாகிறது. அந்த க்ரமத்தில் ஷஷ்டி வ்ரதாவஸாநத்தில் நடை பெற வேண்டிய அவப்ருத ஸ்நாநத்துக்குப் பெருமாள் எழுந்தருளி அதை நடத்தி வைக்கவேணு மென்றும், அப்படி எழுந்தருளும்போது, சங்கம் பேரீ த்வஜம் விதாநம் முதலிய ஸமஸ்த உபசாரங்களும் நடக்கவேணு மென்றும், அவ்வுபசார நிர்வாஹத்தில் தங்களுக்கு ஸமுசிதமான கைங் கர்யங்களை அநுக்ரஹிக்கவேணு மென்றும், அதுவே தங்களுக்கு ஸ்வரூப ப்ராப்த மென்றும், அத்தால் நாங்கள் க்ருதார்த்தர்க ளாவோ மென்றும் தாத் பர்யம். 'மேலையார் செய்வனகள்' என்றதால், பெருமாள் அவப்ருதத்துக்கு எழுந்தருளும்போது, ஸ்ரீ பாஞ்சராத்ராத்ராகமங்களில் கூறப்பட்ட உபசார க்ரமம் விவக்ஷிதம். இத்தால் கோபிகைகள் அங்கப் பறைகொண்ட வாற்றைப் பட்டர்பிரான் கோதை, தனது பாரமைகாந்த்யத்துக்குத் தக்கவாறு தன் திவ்யதேசத் தெம்பெருமான் விஷயமாக விபரிணமம் செய்து இங்கு இவ்விதம் அநுஸந்திக்கிறார் என்பது ஸ்பஷ்டம்.

இப்படி ப்ரார்த்தித்ததற் கிணங்கிப் பகவான் இவர்களுடைய வ்ர தாங்கமான அவப்ருத ஸ்நாநத்துக்கு ஸகல பரிவாரங்களுடன் இவர்கள் கோரிய படி எழுந்தருளித் திருமஞ்ஜநம் கண்டருள இவர்களும் பகவானது ஸ்ரீபாத தீர்த்தத்தில் அவப்ருத ஸ்நாநம் செய்து தங்கள் வ்ரதத்தை முடித்துக்கொண்டு, பிறகு வ்ரதாந்த பாரணத்தையும் பகவானே முடித்துவைத்துத் தங்களை அநு க்ரஹிக்கவேண்டு மென்றும் ப்ரார்த்திக்கிறார்கள்.

27. கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா உந்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோ
மாடை யுடுப்போ மதன்பின்னே பாற்சோறு
மூட நெய்பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

[பதவுரை] கூடாரை—உன்னிடம் அணுகாமல் பிரிந்து நிற்பவரை, [இவர் இருவகை யாவார்:—மரணாந்தமாக த்வேஷம் பாராட்டும் ஹிரண்ய ராவண சிசுபாலாதிகள் என்ன, தாத்காலிக சுர்ப்ப மோஹாதிகளால் தங்களை ஸ்வதந்த்ரர்களாக நினைத்த ப்ரஹ்ம ருத்ரேந்த்ராதிகள் என்ன, ஆகிய இவர்களை ;] வெல்லும் சீர்—ஜயிக்கும் திவ்ய குண ஸம்பத்தை யுடையவனே ; ['நாவிஜிதஸ்ரீ நிவதஸ்தே' என்றபடி, 'உன்னால் ஜயிக்கப்படாத விரோதிகள் கிடையாது ; ஆகையால் ஸர்வத்ர ஜயசீலன் நீ யொருவனே' என்பது கருத்து. 'கூடாரை வெல்லும்' என்றதால், கூடுபவர்களால் நீ ஜயிக்கப்படுகிறாய் என்பது ஸூசிக் கப்பட்டதுபோ லாகும். அதாவது : உனது கல்யாண குணங்களில் ஈடுபட்டு உன்னை ஆச்ரயிக்கும் பக்தர்களுக்கும் நீ இட்ட வழக்காய் நின்று, 'தேஷாம்

நித்யாபியுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்’ என்று அவர்களை ஸர்வ ப்ரகாரமாயும் ரக்ஷிக்கும் பொறுப்பை வஹிக்கிறாய் என்று தாத்பர்யம். இவ்விரண்டு ஆகாரங்களுக்கும் இவ்வவதாரத்திலேயே உதாஹரணம் ‘கோவிந்தா’ என்கிற ஸம்போதநத்தால் குறிக்கப்படுகிறது. இந்த்ரன், தனது யஜ்ஞம் தடை செய்யப்பட்டவுடன் மிகக் கோபங்கொண்டு அதிவ்ருஷ்டியால் கோகுலத்தை நாசம் செய்ய ஆரம்பித்தவளவில், ஸ்ரீ க்ருஷ்ண பகவான் தன்னை ஆச்ரயித்த கோகுல வாஸிகளான ஸமஸ்த ப்ராணிகளிடத்திலும் அதிமாத்ர க்ருபாவிஷ்டராய் அவைகளை ரக்ஷிப்பதற்காகக் கோவர்த்தந பர்வதத்தைக் குடையாகத் தூக்கிக் காத்தவாறே, இந்த்ரன் தன் கர்வத்தை விட்டுப் பெருமாள் திருவடிகளை சரண மடைந்து தன் அபசாரத்தை க்ஷமிக்கவேணு மென்று ப்ரார்த்தித்துப் பெருமாள் ப்ரஸந்நரான பிறகு, அவர் ஸர்வ ப்ராணிகளையும் ரக்ஷித்தருளினது காரணமாக அவருக்குக் ‘கோவிந்தன்’ என்று திருநாமம் சாத்திக் காமதேநுவின் க்ஷீரத்தினால் பட்டாபிஷேகம் செய்வித்த வ்ருத்தாந்தம் இங்கு அநுஸந்தேயம். இப்படிப் பூர்வோபகார ஸ்மரணத்தினால் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் செய்யப்பட்டது. இத்தால் இவர்கள் தன் க்ருபைக்குப் பாத்ரபூதர்கள் என்று பெருமாளுக்குத் தோன்றுவதால், இது மேலே உபகரிப்பதில் அபிப்ராய முண்டாகக் காரண மாகிறது.] யாம் உன்னை பாடி பறை கொண்டு பெறும் சம்மானம்—நாங்கள் உன்னைச் செவிக் கினிமையாகவும் மனதுக்கு ப்ரீதிகரமாகவும் யதார்த்தமாய் ஸ்துதி செய்து அத்தால் உனக்கு ஏற்பட்ட க்ருபையினால் உனது அநுக்ரஹத்தைக் கொண்டு எங்கள் வ்ரதத்தைப் பூர்த்தி செய்து கொண்டதால் நாம் அடையும் நற்பேறு என்னவென்றால் :—நாடு புகழும் பரிசினால்— ‘பாரோர் புகழ’ என்றபடி நாட்டார் (அதாவது: ஊரிலுள்ள பெரியோர்கள்) நாங்கள் உன்னை விடாது ஆச்ரயித்து உன் அநுக்ரஹத்தைப் பெற்று வ்ரதத்தைப் பூர்த்திசெய்து கொண்டதைப்பற்றி எங்களை மெச்சிப் பேசி ஆசீர்வதித்து எங்களுக்கு ப்ரீதி தாநமாகத் தரும் வெகுமானங்களால்; நன்றாக சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே பாடகமே யென்றனைய பல்கலனும் யாம் அணிவோம் ஆடை உடுப்போம்—உத்க்ருஷ்டமான கைவளைகள், தோள்வளைகள், கர்ண பூஷணங்கள், கர்ணப் பூக்கள், கால் தண்டைகள் என்றிவ்விதமான பற்பல ஆபரணங்களை நாம் பூட்டிக்கொள்வோம்; நல்லாடைகளைத் தரிப்போம்; [‘நன்றாக’ என்பது ஆடைக்கும் அந்வயிக்கும். இந்த ஸௌமங்கல்ய வ்ரதம் பூர்த்தியாய் அவப்ருத ஸ்நாநம் நடந்தவுடன் வ்ரதாநுஷ்டாநம் செய்த கந்யகைகளுக்கு ஊரிலுள்ள பெரியோர் பெருமாள் ஸந்நிதிக்கெதிரில் திவ்ய தம்பதிகளின் திருவடிகளில் ஸமர்ப்பித்து, அந்த ப்ரஸாதமாகப் புதிதான ஆபரணங்களையும் ஆடைகளையும் மங்களாசாஸந பூர்வமாகக் கொடுப்பித்து, அவைகளை அப்பெண்கள் அப்போதே தரித்துக்கொண்டு பெருமாளையும் பெரியோர்களையும் தண்டம் ஸமர்ப்பிக்கும் ஸம்ப்ரதாயம் இங்கு விவக்ஷிதம். இதற்குப் பிறகு வ்ரதாந்த பாராயணத்துக்காக பெருமாளுக்கு க்ருதஸித்தமான க்ஷீராந்நத்தை நிவேதநம் செய்து நிவேதித்த சேஷத்தைத் தாங்கள் ஸ்வீகரித்து க்ருதார்த்தர்க ளாவதைப் பேசுகிறார்.] அதன் பின்னே பால் சோறு மூட நெய் பெய்து முழங்கை வழி வார கூடியிருந்து குளிர்ந்து— அதற்குப் பிறகு

க்ஷீராந்நத்தில் அதன் மேல்பாகம் மறையும்படி நிறைய நெய் கலந்து அவ்வந்நம் பெருமாள் ஸந்நிதி முன்பு தங்களுக்கு விநியோகம் செய்யப்படும்போது அதிலுள்ள நெய் முழங்கை வரையில் பெருகிக்கொண்டிருக்க, இப்படி எல்லோரும் திரண்டு நின்று ஆநந்த பரிதர்களாக வேணும். [இங்கு 'நெய் முழங்கை வழிவார' என்றிருப்பதாலும், 'கூடியிருந்து' என்று மட்டில் கூறிப் போஜநம் செய்வதை ப்ரஸ்தாவிக்காததாலும், பெருமாள் அமுது செய்த க்ஷீராந்நம் விநியோகம் செய்யப்படும்போது, அதைத் தாங்கள் கைகளில் வாங்கிக்கொண்டு பெருமாள் ஸந்நிதியில் போஜநம் செய்வது அபசாரகோடியில் சேர்ந்த தாகையால் அங்கிருந்து ஸ்தலாந்தரம் சென்று எல்லோரும் கூடி உட்கார்ந்து புசித்து மகிழ்வோம் என்று தாத்பர்யம்.] ஏல் ஓர் எம்பாவாய்.— [தொடரும்]

ஸ்ரீ :

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விரோதி ஸூ சித்திரை (மேஷ) மாஸம் [ஏப்ரல் - மே—1949]

13—4—49	1௳ புதன்கிழமை	...	சூந்ய திதி ; சித்திரை விஷு மேஷ ரவி 11-21 ; [இன்று மேஷ ஸங்க்ரமண தர்ப்பணம்]
14—4—49	2௳ வியாழக்கிழமை	...	க்ருஷ்ண த்விதீயை திதி
23—4—49	11௳ சனிக்கிழமை	...	க்ருஷ்ண ஏகாதசி திதி 60-0
24—4—49	12௳ ஞாயிற்றுக்கிழமை	...	க்ருஷ்ண த்வாதசி திதி ; ஸர்வ ஏகாதசி வ்ரதம்
26—4—49	14௳ செவ்வாய்க்கிழமை	...	சதுர்த்தசி திதி
27—4—49	15௳ புதன்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை திதி
28—4—49	16௳ வியாழக்கிழமை	...	மேஷ சுக்ல ப்ரதமை திதி
29—4—49	17௳ வெள்ளிக்கிழமை	...	அதிதி
3—5—49	21௳ செவ்வாய்க்கிழமை	...	ஸ்ரீமத் பாஷ்யகாரர் திருநக்ஷத்ரம் ; பஞ்சமி திதி
4—5—49	22௳ புதன்கிழமை	...	சுக்ல ஷஷ்டி ஸப்தமி திதி த்வயம்
5—5—49	23௳ வியாழக்கிழமை	...	சுக்ல அஷ்டமி திதி
8—5—49	26௳ ஞாயிற்றுக்கிழமை	...	ஏகாதசி திதி
9—5—49	27௳ திங்கட்கிழமை	...	வைஷ்ணவ ஏகாதசி வ்ரதம்
10—5—49	28௳ செவ்வாய்க்கிழமை	...	ஸ்ரீ மதுரகவியாழ்வார் திருநக்ஷத்ரம்
11—5—49	29௳ புதன்கிழமை	...	ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தி
12—5—49	30௳ வியாழக்கிழமை	...	சித்ரா பௌர்ணமி ; பௌர்ணமீ திதி
13—5—49	31௳ வெள்ளிக்கிழமை	...	மேஷ க்ருஷ்ண ப்ரதமை திதி

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

அழகியசிங்கர் காப்பாற்றினர்

[ஓர் கற்பனைக் கதை]

[ஸ்ரீ. உப. திருப்பூந்துருத்தி V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் B. A., மேல் மாம்பலம்]

இப்போது கூறப்போகும் ஸம்பவம் வெகு காலத்துக்குமுன் நடந்தது. அந்த ஸமயத்தில் ஸ்ரீமதஹோபில மடம் திவ்யாஸ்தானத்தை அலங்கரித்தருளிய ஸ்ரீ அழகியசிங்கர், திருச்சினப்பள்ளிக்கு ஸுமார் 20 மைல் மேற்கிலுள்ள திருப்பளாத்துறை அக்ரஹாரத்தில் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் நடத்திக்கொண்டு எழுந்தருளியிருந்தார். அப்போது மடத்துக்குச் சொந்தமான 'தாமோதரன்' என்கிற பெரிய யானைக்கு மதம் பிடித்துவிட்டது. அது பாகனுக்கு அடங்காமல் சங்கிலிகளை அறுத்துக்கொண்டு இருபது மைல் கிழக்கே ஓடிவந்துவிட்டது. அதனால் திருச்சினப்பள்ளியும் ஸ்ரீரங்கமும் அமர்க்களப்பட்ட விதத்தை வர்ணிக்க முடியாது.

அங்காடிக்காரி முத்தம்மா என்கிற ஒரு பெண்பிள்ளை, வாழைப்பழம் கடலைப் பட்டாணி முதலியவை விற்பவள். தினமும் ஸாயங்காலம் நாலரை மணிக்குத் திருச்சினப்பள்ளியிலிருந்து ஸ்ரீரங்கம் போகிற சாலையில் வீதியில் ஒரு கோணியை விரித்து, அதில் கடலைப் பட்டாணி வாழைப்பழம் முதலியவற்றைப் பரப்பி வைத்திருப்பாள். அநேக காலேஜ்களும் பள்ளிக்கூடங்களும் உள்ள அந்த நகரத்தில் எப்போதும் 'ஜேஜே' என்று கூட்டங் கூடியிருக்குமாதலால், அவளுக்கு வ்யாபாரத்துக்குக் குறைவு இருக்காது. சின்னப் பள்ளிக்கூடப் பையன்களெல்லாம் முத்தம்மா கடையில் தினமும் காலணா அரையணா வ்யாபாரம் பண்ணமல் போகமாட்டார்கள். அவளுடைய சிரித்த பேச்சும் மரியாதையான செய்கைகளும் அவர்களை ஆகர்ஷித்துவிட்டன.

அன்று நாலரை மணிக்கு முத்தம்மா அங்காடியில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அவளுடைய குழந்தை மூன்று வயதுள்ள சின்னப்பனும் தாயாரோடு அங்கிருந்தான். அவன் வேடிக்கை பார்ப்பதும், விளையாடுவதும், தன்னுடைய அழகிய சிறு கைகளால் வாடிக்கைக்காரர்களுக்குப் பழங்கள் எடுத்துக் கொடுப்பதும், தாயின் மனத்தைப் பூரிக்கச்செய்தன.

ஸாயங்காலம் பள்ளிக்கூடம் விட்டுப் பையன்கள் வழக்கம்போல் நாலைந்து பேர்கள் ஜமாவாக வந்துகொண்டிருந்தார்கள். கவலையற்ற குழந்தைப் பையன்கள் பள்ளிக்கூடம் விட்டவுடன் கொம்மாளம் போடக் கேட்கவேணுமா? ஒருவன் கணக்கு வாத்யாரை ஏமாற்றிய வேடிக்கையைச் சொல்லும்போது எல்லாரும் களுக்கென்று சிரிப்பார்கள். இன்னொருவன் தான்

வீட்டில் பாடம் படிக்காமலேயே 'புர்டா' விட்டுப் பத்துக்குப் பத்து மார்க்கு வாங்கின விதத்தைச் சொல்லுவான். "போடா போ! இன்னிக்கிப் பூகோளம் க்ளாஸிலே வாத்யார் 25 ஜில்லா பேரையும் எழுதச் சொன்னாரோ இல்லியோ! திருநெல்வேலிக் கப்புறம் தென்கன்னடம் வரையில் ஜில்லா பேர் மறந்துபோயிடுத்து. என்ன பண்ணேன் தெரியுமா? அந்த இடத்திலே செங்கல்பட்டு தென்னார்க்காடு என்று இரண்டாந் தடவையாக எழுதிவைத்தேன். வாத்யார் ஒண்ணு ரெண்டுன்னு எண்ணி 25 ஜில்லா பேர் எழுதியிருக்குன்னுட்டு எனக்கு 'ரைட்' கொடுத்துவிட்டார்டா!" என்று சொல்லும்போதே ஸந்தோஷம் தாங்க முடியவில்லை. இதைக் கேட்டு எல்லாரும் கடகட வென்று சிரித்தார்கள்.

இதற்குள் முத்தம்மாவின் அங்காடி வந்துவிட்டது. 'டேய்! முத்தம்மா கடை வந்துடுத்துடா!' என்றான் ஒருவன். எல்லாரும் கடைக்கு வந்தார்கள். 'முத்தம்மா! காலணாவுக்குப் பட்டாணி கொடு' என்றான் ஒரு பையன். முத்தம்மா காலணா உழக்கு நிறையப் பட்டாணியை எடுத்தாள். 'நான் போடறேம்மா!' என்று சின்னப்பன் உழக்கைக் கையில் வாங்கிப் பட்டாணியை அந்தப் பையனுடைய கையில் கொட்டினான். முத்தம்மாவுக்கு ஸந்தோஷம் தாங்கவில்லை. பையன்களும் ஸந்தோஷத்தால் சிரித்தார்கள். 'முத்தம்மா தேவலையே! மூணு வயஸிலேயே குழந்தைக்கு அங்காடி விற்கப் பழக்கிக் கொடுத்துட்டாளே!' என்றான் ஒருவன். முத்தம்மாவுக்குத் தன் குழந்தையைப்பற்றிப் பேசக் கேட்டதும் ஸந்தோஷம் பொங்கி வந்தது. குழந்தையை அணைத்துக் கட்டிக்கொண்டாள். "என் ராஜாக்கண்ணு பெரியவனாய்ப் போய் உங்களெல்லாரையும் போலே இஸ்கோலுக்குப் போய்ப் படிச்சுப் பாஸ் பண்ணி ஸம்பாதிச்சுப் போடப்போறாருங்க! இந்த அங்காடி அவனுக்கு வேண்டாமுங்க!" என்றாள் பெருமையுடன். 'ஏண்டா! நீ பீ. ஏ. பாஸ் பண்ணிப் பெரிய வேலைக்குப் போகப்போறீயாமல்ல!' என்றான் ஒருவன் குழந்தையின் கன்னத்தை ஒரு விரலால் தொட்டுக்கொண்டே. சின்னப்பன், 'நான் படிக்கப்போகிறேன்' என்று சொல்லி, இது சொல்வதற்குள் வெட்கம் வந்துவிட, தாயார் புடவையை இழுத்து முகத்தை மூடிக்கொண்டான். 'குழந்தை நல்ல அதிர்ஷ்டக்காரன், முத்தம்மா! அவனைப்பத்தி நீ ஒண்ணும் கவலையே படவேண்டாம்' என்றான் ஒரு பையன்.

இவர்கள் அங்காடியில் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலேயே பத்துப் பதினைந்து பேர்கள் காவேரியை நோக்கி ஓடினார்கள். 'என்னங்க சமாச்சாரம்? ஏனுங்க ஓடுறீங்க?' என்று கேட்டாள் முத்தம்மாள் பக்கத்தில் ஓடிய ஒருவனைப் பார்த்து. அதற்கு அவன், 'அஹோபில மடத்துச் சாமியார் யானை பைத்தியம் பிடிச்சு இங்கே திருச்சினாப்பள்ளிக்கு ஓடியாந்துடுத்தாம். காவேரி மணலிலே பெரிய கொட்டம் அடிக்குதாம். எல்லாரும் பார்க்க ஓடறாங்க' என்றான் தானும் காவேரியை நோக்கி ஓடிக்கொண்டே.

'யானை பைத்தியம் பிடித்தால் என்ன பண்ணும்? எப்படிக் கொட்டம் அடிக்கும்?' என்று தெரிந்துகொள்ளவேணுமென்று சின்னப்பனுக்கு ரொம்ப

வும் ஆசை உண்டாயிற்று. தாயாரைக் கேட்டான் "எம்மா! யானை பைத்தியம் பிடித்தால் என்ன பண்ணும்மா?" என்று.

"யானை நல்லா இருக்கும்போது ஓட்டற பாகன் சொன்னபடி கேட்கும் கண்ணு! பைத்தியம் பிடிச்சா அவனுக்கு அடங்காது. தீனி திங்காது. சங்கிலி கயறு எல்லாத்தையும் அறுத்துக்கிட்டு ஓடும். எதுக்கே யாராவது வந்தால் அவுங்களைக் குத்திக் கொண்ணுபோடும். பைத்தியம் புடிச்ச யானை வருவுதுண்ணு எல்லாரும் ஓடி ஒளிஞ்சுக்குவாங்க" என்ருள் தாயார்.

'யானைக்கு எம்மா பைத்தியம் பிடிக்குது?' என்ருன் சின்னப்பன். அவனுடைய இளம் மனதில் தன்னுடைய தாயாருக்கு எல்லாம் தெரியும் என்ற நம்பிக்கை குடிகொண்டிருந்தது. குழந்தையை அணைத்துக்கொண்டாள் முத்தம்மா. எதிரில் பழம் வாங்க வந்தவர் ஒருவருக்குப் பழத்தைக் கொடுத்தாள். சில்லரையை வாங்கிக் கோணிக்கு அடியில் போட்டாள்.

குழந்தை தாயார் முகத்தைப் பார்த்து, 'யானைக்கு எம்மா பைத்தியம் பிடிக்குது?' என்ருன் மறுபடியும்.

யானைக்கு என் பைத்தியம் பிடிக்கிறது என்று அவன் எங்கே கண்டான்? ஆயினும் குழந்தைக்கு ஏதாவது பதில் சொல்லியாகவேண்டுமே. 'வெய்யில் தாங்காமே பைத்தியம் பிடிக்கும் கண்ணு! அத்தோடே தன்னுடைய யானை இனம் வேறு ஒண்ணும் ரொம்ப நாளாகக் கண்ணிலேயே படாமலிருந்தால் அதே ஏக்கத்தாலேயும் பைத்தியம் பிடிக்குமாம்' என்று தனக்குத் தெரிந்ததைச் சொன்னுள்.

குழந்தையும் தாயாரும் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது காவேரி மணலில் 'தாமோதரன்' யானை கொம்மாளம் அடித்துக்கொண்டிருந்தது. யானை ஆயிரக் கணக்கான ஜனங்களுடைய த்ருஷ்டிக்கு ஒரே விஷயமாக இருந்துகொண்டு கொம்மாளம் அடித்தது. அத்தனை ஜனங்களும் அதனுடைய விளையாட்டுகளில் லயித்துப்போய்விட்டார்கள். இந்த வேடிக்கைக் காட்சி காவேரி மணலில் சிந்தாமணித் துறைக்கு அடுத்தாற்போல் நடைபெற்றது. யானை காவேரி மணலில் ஒரு கரையிலிருந்து இன்னெரு கரை வரையில் வேகமாக ஓடும். திடீரென்று பின்னங் கால்களைப் பூமியில் ஊன்றிக் கொண்டு முன்னங்கால்களையும் தும்பிக்கையையும் உயரத் தூக்கிக்கொண்டு உரத்த குரலில் பிளிறும். அந்த சப்தம் இடி இடித்தது மாதிரி பயங்கரமாக இருக்கும். மறுபடியும் திடீரென்று குறுக்கே திரும்பி நாலு கால் பாய்ச்சலில் தாவும். கூடியிருக்கிற ஜனங்கள் யானை எந்தப் பக்கம் திரும்புகிறதோ அந்தப் பக்கத்திலிருந்து திடுதிடு வென்று வேறு பக்கங்களுக்கு ஓடுவார்கள். இப்படி ஓடும்போது கைகளில் இருக்கும் குடைகளைப் போடுகிறவர்கள் எத்தனையோ பேர்கள். செருப்பைத் தொலைத்தவர்களும் மணி பர்ஸைத் தொலைத்தவர்களும் எத்தனையோ பேர்கள். பறந்து ஓடுகிற மேல்வேஷ்டிகளைக்கூட எடுக்கப் பயந்து போகிறவர்களும் இருந்தார்கள்.

இப்படிப் பதினாயிரக் கணக்கான ஜனங்களுக்கு மத்தியில் 'தாமோதரன்' கொட்ட மடித்தது. அது சற்று அயர்ந்ததுபோ லிருக்கும்போது பாகன் கிட்டே வருவான். அது உடம்பை ஆட்டிக்கொண்டு அவனை நோக்கியவுடனே ஓட்டம் பிடிப்பான். அதுவும் ஓடும். தும்பிக்கையால் மணலை வாரி அவன் மேல் வீசி எறியும். மறுபடியும் ஓடும். திடீரென்று கீழே படுத்துப் புரளும். யாராவது அருகில் வந்தால் பாய்ந்து எழுந்திருக்கும். ஸாதாரணமான காலங்களில் உடம்பை அசக்குவதற்குக்கூட மிகவும் மெதுவாகவும் நிதானமாகவும் இருக்கும் யானை மதம் பிடித்தவுடன், ஆஹா! எப்படி மாறிவிடுகிறது! அப்போதுதான் என்ன வேகம்! என்ன சுறுசுறுப்பு! மதம் பிடித்தால் புத்திசாலித்தனமும் அதிகமாகிவிடும் போலும்.

திடீரென்று ஜனங்கள் திருச்சினாப்பள்ளி டவுனை நோக்கி ஓட ஆரம்பித்தார்கள். சிலர் 'ஏன் ஓடுகிறோம்?' என்று தெரியாமலே ஓடினார்கள். சிலர் 'யானை டவுன் பக்கம் திரும்பிவிட்டது; பிழைக்கவேண்டுமானால் வழியில் நிற்காதீர்கள்; ஒளிந்து கொள்ளுங்கள்' என்று கத்தினார்கள். வீடுகள் எதிர்ப்பட்ட இடங்களில் தடதட வென்று புகுந்துகொண்டார்கள். யானை வருகிறது என்றதும் ரோட்டில் என்ன பரபரப்பு! 'ஐயோ! அதோ யானை வந்துடுச்சே!' என்றாள் ஒருத்தி. 'ஆ! வந்துடுச்சா!' என்று முத்தம்மா உயிருக்காகப் பாய்ந்து எழுந்தாள். 'அதோ யானை வந்துடுச்சு; இன்னும் ஒரு நிமிஷத்தில் என்னுடைய அங்காடிக்கு வந்துடும். கடையைச் சுருட்ட நேரமில்லை' என்று அப்படியே போட்டுவிட்டுப் பக்கத்திலிருந்த வீட்டுக்குள்ளே ஓடிப்போய்ப் புகுந்துவிட்டாள். உள்ளே போனதுதான் தாமதம். 'ஆ! என்ன செய்துவிட்டேன்! ஐயோ! குழந்தை! குழந்தை!' என்று கத்தினாள். குழந்தையை எடுத்துவர வாசலில் பாயப்போனாள். அதற்குள் வாசலுக்கு யானை வந்துவிட்டது. என்ன ஓட்டம்! என்ன ஆட்டம்! என்ன அசைவு! அது நேரே ஓடிவிடவில்லை. சுற்றுமுற்றும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு வருகிறது. வீதியில் ஈ காக்கை இல்லை. எல்லா ஜனங்களும் உயிருக்குப் பயந்து வீடுகளுக்குள்ளோ, சுவரின் மேலோ, அல்லது கூரையின் மேலோ ஏறிக்கொண்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். இந்த ஸமயத்தில் முத்தம்மா வீதியில் இறங்கினால் அவள் இறந்த மாதிரிதான். இந்த முரட்டு யானையின் காலடியில் போய் அகப்பட்டுக்கொண்டால் அப்புறம் மீள முடியுமோ? அவளுக்குப் பின்னால் இருந்தவர்கள் அவளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்கள். 'ஐயோ! என் குழந்தை! என் குழந்தை!' என்று அவள் துடித்தாள். யானையின் வேகத்தைக்காட்டிலும் அவளுடைய வேகம் அதிகமாக இருந்தது. பின்னால் நாலைந்து பேர்கள் அவளைக் கட்டிப் பிடித்தும் அவர்களால் அவளை சமாளிக்க முடியவில்லை. அத்தனை பேரையும் இழுத்துக்கொண்டே அவள் வாசலுக்கு நகருகிறாள்.

இப்போது ஒருவருமில்லாத வீதியில் அங்காடியில் நின்றுகொண்டிருந்தான் சின்னப்பன். தினமும் அந்த வழியாகத் திருச்சி மலைக் கோவில் யானை

காவிரிக்குத் திருமஞ்சனம் கொண்டுவரப் போகும்போதும் வரும்போதும் அவன் பார்த்திருக்கிறன். அது வழக்கமாக மிகவும் ஸாதுவாக உடம்பை ஆட்டிக்கொண்டே வரும். தங்கள் கடைக்கு வந்தவுடன் துதிக்கையை நீட்டும். தான் தன்னுடைய சிறிய கைகளால் ஒன்று அல்லது இரண்டு பழங்களை அதற்குக் கொடுப்பான். அது அந்தப் பழத்தை வாங்கித் தன்னுடைய வாய்க்குள் போட்டுக்கொள்ளும்போது அவனுக்கு வேடிக்கையாக இருக்கும். கையைக் கொட்டிச் சிரிப்பான். அது பாட்டுக்குத் தன் வழியே போய் விடும். 'யானை இவ்வளவு ஸாதுவான ப்ராணி யாயிற்றே; இதைப் பார்த்து ஏன் எல்லாரும் இப்படிப் பயந்து நடுங்குகிறர்கள்?' என்று அவனுக்குத் தெரியவில்லை. யானை வருகிறது என் எல்லாரும் பேசிக்கொண்டதும், தன்னுடைய தாய் பரக்கப் பரக்க ஓடியதும், எல்லாரும் அவளைப்போலவே ஓடியதும், அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தன. அவன் காவிரியிலிருந்து யானை வருகிறதைப் பார்த்தான். இந்த யானையும் தான் முன்பு எவ்வளவோ தடவைகள் பார்த்திருக்கும் யானையைப்போலவேதான் இருந்தது. யானை கிட்டே வந்தவுடன் அதற்குக் கொடுக்கக் கையில் இரண்டு பழத்தை எடுத்து வைத்துக் கொண்டு காத்திருக்கிறன் குழந்தை. 'அடே! சின்னப்பா! இங்கே வாடா! இங்கே வாடா!' என்று அம்மாவும் மற்றவர்களும் கூப்பிடும் குரல் அவன் காதில் விழவில்லையோ அல்லது அவன்தான் அதைச் சட்டை செய்யவில்லையோ? 'மிகவும் பெரிய ஆபத்து வந்த ஸமயத்தில் நினைக்கவேண்டியது பகவானுகிய ஹரியை. அவர் அந்த ஆபத்தைப் போக்கி விடுவார்' என்று சாஸ்த்ரங்கள் சொல்லலாம். கஜேந்த்ராழ்வான் ஆதிமூலத்தை அழைத்திருக்கலாம். த்ரௌபதி த்வாரகாவாஸியாகிய க்ருஷ்ணனைக் கூப்பிட்டிருக்கலாம். ஆனல் கல்வியறிவில்லாத ஏழை அங்காடிக்காரி முத்தம்மாவுக்கு ஶாஸ்த்ரமும் தெரியாது; ஞானமும் இல்லை. பகவானை ப்ரார்த்திக்கும் ஸமயோசித ஞானம் அவளுக்கு எப்படி வரும்? இங்குத்தான் ஸூக்ஷ்மம் பொதிந்துகிடக்கிறது. பகவான் இருக்கிறர். எப்போதும் நம்மோடேயே இருந்துகொண்டு நம்மைச் சரியான வழியில் செலுத்துகிறர். ஆபத்துக் காலத்தில் தம்மை நினைக்கும்படி செய்கிறர். இதற்குப் பலனையும் கொடுத்தருளுகிறர்.

'யானை கிட்டே வந்துவிட்டதே! பகவானே! நரஸிம்மா! குழந்தையைக் காப்பாற்றும்! பெருமாளே! நரஸிம்மா! குழந்தையைக் காப்பாற்றும்! காப்பாற்றும்!' என்று அலறினள் தாயார். இந்த ப்ரார்த்தனையில் அங்க பஞ்சகங்களோடு கூடிய ஶரணாகதி பொதிந்து கிடப்பதை அவள் அறியாள். ஆநுகூல்ய ஸங்கல்பமும் ப்ராதிகூல்ய வர்ஜநமும் இந்த ப்ரார்த்தனையில் மறைந்து கிடக்கின்றன. 'ரக்ஷிப்பான்' என்கிற மஹாவிச்வாஸம் பூர்ணமாக இருக்கிறது. காப்பாற்றுமாறு ப்ரார்த்தித்தல் இருக்கிறது. குழந்தையை ஈச்வரன் தயவுக்கு விட்டுவிட்டாள். அவனைத் தவிர வேறு காப்பாற்றக்கூடியவர் இல்லாததையும் தெரிந்திருந்தாள். இதுதானே சரணாகதி. 'ஆபத்பாந்தவா! அஹோபில நாதா! அழகியசிங்கமே! குழந்தையைக் காப்பாற்றும்' என்று அலறினள். தன்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கும் அத்தனை பேர்களையும் பிடித்து

இழுத்துக்கொண்டு வருகிருள். 'குழந்தையைக் காப்பாற்றுகிறேன்' என்று ஓடக்கூடிய தைரியம் அங்கு யாருக்கும் இல்லே. தாயார் கண்களில் காவிரி ஜலம்போலக் கண்ணீர் பெருகி ஓடுகிறது. பிள்ளேயைப் பறிகொடுத்தவள் போலவே துடிக்கிருள். எல்லாருங் கூடவே கண்ணீர் வடிக்கிருர்களே யன்றி வேறு ஒன்றும் அவர்களால் செய்யமுடியவில்லே.

இப்போது அங்காடி வாசலிலேயே யானே நிற்கிறது. அதற்குக் கை நிறைய வாழைப்பழத்தை எடுத்து நீட்டுகிருன் சின்னப்பன். முதலில் யானே சின்னப்பனேக் கவனிக்கவில்லே. 'சாமி! சாமி! இந்தா பழம்!' என்று அவன் அதைக் கூப்பிடுகிருன். 'இவன் தலேவிதி இப்படியா இருக்கவேண்டும்! கவனிக்காமல் போகிற யானேயைக் கூப்பிடுகிருனே!' என்று எல்லாரும் அழமாட்டாக் குறையாகக் கண்களில் ஜலம் வடிக்கிருர்கள். முத்தம்மாள் என்ன நடக்கிறதென்று தெரிந்துகொள்ளக்கூட முடியாமல் துடிக்கிருள்.

யானே சின்னப்பனிடம் வருகிறது. அவனுக் கெதிரில் நிற்கும்போது அதனுடைய பயங்கரமான ஆட்டத்தைக் காணும். அவன் பழங்களே நீட்டுகிருன். அவற்றை வாங்கி வாயில் போட்டுக்கொள்ளுகிறது யானே. 'இளங்கன்று பய மறியாது' என்பது அவன் விஷயத்தில் உண்மை யாயிற்று. தனக்காக எல்லாரும் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும்போது தான் கையைக் கொட்டிச் சிரித்துக்கொண்டிருக்கிருன். யானே மறுபடியும் தும்பிக்கையை நீட்டிற்று. குழந்தையை மெதுவாகத் தூக்கிக்கொண்டது. 'ஐயோ! யானே குழந்தையைக் கொல்கிறதே!' என்கிற அலறல் எங்கும் கேட்கிறது. முத்தம்மாவுக்குக் கண்களில் ஒரே ஜலம். அதனல் பார்க்க முடியவில்லே. 'குழந்தையை யானே கொல்லுகிறதே' என்கிற வார்த்தைகள்தான் கேட்கின்றன. துடிக்கிருள். மதம் பிடித்த யானேயைவிட அவள் பலம் இப்போது அதிக மாகிவிட்டது. தன்னேக் கட்டிப் பிடித்துக்கொண்டிருந்த எல்லாரையும் பிடித்து இழுத்துக்கொண்டு வாசற்படிக்கு வந்துவிட்டாள்.

தாமோதரன் யானே என்ன செய்கிறது? சின்னப்பனே ஒரு நிமிஷந்தான் தூக்கிவைத்துக்கொண்டு இருந்திருக்கும். சுற்றிலும் பார்த்தது. ஒருவரையும் காணும். எதிரில் உள்ள வீட்டில் முத்தம்மாள் துடிக்கிறதைக் கண்டது. அவள்தான் அவனுடைய தாயார் என்று என்னமாகவோ கண்டுகொண்டது. 'பெற்ற மனம் பித்து' என்றபடி அலறித் துடித்துக்கொண்டு பின்னல் நாலு பேரையும் இழுத்துக்கொண்டு வாசற்படிக்கு வெளியில் வந்துகொண்டிருந்த முத்தம்மாவின் காலின் கீழ்க் குழந்தையை மெதுவாக வைத்துவிட்டு யானே ஒரு பெரிய சப்தத்தோடு அப்பால் ஓடிவிட்டது.

சரணுகதி பலன் அளித்துவிட்டது. முத்தம்மாள் மயக்கம் போட்டு விழுந்ததும், பின்னல் மயக்கந் தெளிந்ததும், மற்றதும் வாசகர்கள் ஊஹித்துக் கொள்ளவேண்டியதுதான். அதற்கப்புறம் நடந்த ஸமாசாரங்கள் சரித்திரத்தில் பதிந்து கிடக்கின்றன. திருச்சினுப்பள்ளி கலெக்டர் யானேயைச் சுட்டுக்

கொன்றுவிடவேண்டுமென்றார். ஸ்ரீமத் அழகியசிங்கர் வேண்டாம் என்றும், அதனுடைய பாகனே அதை அடக்கிவிடுவான் என்றும் சொல்லி, மந்திரித்த தீர்த்தத்தையும் துளஸியையும் கொடுத்து அனுப்பியருளினார். மறுநாள் தின சரிப் பத்ரிகையில், திருச்சியில் மதம் பிடித்த யானை அட்டஹாஸம் செய்த தைப்பற்றியும், அதன் பாகன் அதை ஆச்சரியமாய் அடக்கிவிட்டதைப் பற்றி யும் செய்தி வந்தது. இந்த யானையின் மூலமாக முத்தம்மாளுடைய குழந்தை யை ஸ்ரீ அஹோபிலம் பெருமாள் ஸ்ரீ அழகியசிங்கர் காப்பாற்றி அநுக்ரஹம் செய்தருளியதை ஒரு தினசரிப் பத்ரிகையும் ப்ரசுரிக்கவில்லை. ‘என் கண்ணு பீ. ஏ. பாஸ் பண்ணிப் பெரிய உத்யோகம் பண்ணப்போகிறான்’ என்று ஆசைப் பட்ட தாயாருடைய மனங் குளிர, சின்னப்ப முதலியார் பிற்காலத்தில் பெரிய கலெக்டராக விளங்கினார். எப்பொழுதும் அவருக்கு ஸ்ரீ அஹோபில மடத்தில் விசேஷமான பக்தி இருந்துவந்தது. வருஷத்துக்கு இரண்டு மூன்று தடவை களாவது போய் ஸ்ரீ அஹோபில மடத்து ஸ்ரீ அழகியசிங்கரை ஸேவித்து மந்த்ராக்ஷதை பெற்று மகிழ்ந்துவந்தார்.

‘மனிதர்களெல்லாம் என்னைக் கைவிட்டுவிட்டபோது, ‘பகவானே நரஸிம்மா! காப்பாற்று!’ என்று என் தாயார் கதறினாள். உடனே நரஸிம்மன் கைமேல் பலன் கொடுத்தருளினார். நீங்களும் எல்லாரும் பெருமாளிடம் பக்தி பண்ணுங்கள்’ என்று அவர் எல்லாருக்கும் உபதேசம் செய்துவந்தாராம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

சேஷத்வம்

[ஸ்ரீ. உப. சிலுக்கூர் மா. வேங்கடராகவாசார்ய ஸ்வாமி, ஹைதராபாத் ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ கார்யம், கத்வால் ஸம்ஸ்தாந தர்மாதிகாரி.]

சேஷத்வம் என்பதற்கு அடிமைத்தனம் என்பது பொருள். இது ஸோபாதிகமென்றும் நிருபாதிகமென்றும் இரு வகைப்படும். ஒரு ப்ரயோஜ நத்தை நாம் எதிர்பார்த்துப் பிறருக்கு அடிமையாக இருப்பது ஸோபாதிக சேஷத்வமாகும். நம்மிடமிருந்து ஒரு ப்ரயோஜநத்தை எதிர்பார்த்து நமக்கு அடிமையாக இருந்து நாம் நியமிக்கும் வேலைகளைச் செய்துவரும் ஒரு ஸேவகன் ஸோபாதிக சேஷன் என்று சொல்லப்படுகிறான். ஒரு ப்ரயோஜநத்தையும் அபேக்ஷிக்காமல் பிறருக்கு அடிமையாக இருத்தலே நிருபாதிக சேஷத்வ மாகும். ஜீவாத்மாக்கள் யாவும் ஸ்ரீமந் நாராயணனுக்கு நிருபாதிக சேஷர்கள். இதை ஸ்ரீ சங்கரர் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ராஜபத ஸ்தோத்ரத்தில்

“தாஸபூதா: ஸ்வத: ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: |
அதோஹமபி தே தாஸ இதி மத்வா நமாம்யஹம் ||”

[எல்லா ஆத்மாக்களும் பரமாத்மாவுக்கு ஸ்வத: தாஸபூதர்கள் (அதாவது: நிருபாதிக தாஸர்கள்); ஆகையால் நானும் அந்த ஜீவாத்மாக்களில் ஒருவனுகையால் நானும் ேஶஷபூதனென்று எண்ணி உன்னை நமஸ்கரிக்கின்றேன்] என்று அறுதியிட்டார்.

இந்த ேஶஷத்வம் ஜீவாத்மாக்களுக்கு நித்யமானது. இது இவர்களுக்கு நித்யமானதென்று சொன்னுல், 'നിരഞ്ജനഃ പരമം സാമ്യമുപൈതി' என்கிற ச்ருதியின்படி 'முக்தாத்மாவுக்குப் பரமாத்மாவுடன் பரம ஸாம்யம் சொல்லுகிறதற்கு விரோதம் வாராதோ? மோக்ஷம பெறுமளவும் ேஶஷனுக இருந்து, பிறகு ஸ்வதந்த்ரன் என்பது கூடுமோ? அப்பொழுது ேஶஷத்வம் நித்யமென்று சொல்லவொண்ணு தல்லவா?' என்னில், நித்ய மென்று சொல்ல முடியும். எங்ஙனே யென்னில்: முக்தனுக்கு ச்ருதியில் சொன்ன ஸாம்யமானது, ஒரு தராசில் ஒரு பக்கத்தில் பொன்னையும் மற்றொரு பக்கத்தில் குந்தமணியையும் வைத்து நிறுத்து, 'இவைகள் ஸமம்' என்று சொன்னுல், நிறையில் இவை யிரண்டும் ஸமமென்று தாத்பர்ய மத்தனை போக்கி, பொன்னின் ஸர்வ ஸாம்யம் குந்தமணிக்கு வாராதன்றே? அப்படியே, இங்கு ஜீவாத்மாக்களுக்குச் சொன்ன பரம ஸாம்யம் ஜ்ஞானத்திலும் ஆநந்தத்திலும் மாத்ரமே யுள்ளது. இதையே வ்யாஸர், 'ഭോഗമാത്രസാമ്യലിംഗാച്ച' என்று காட்டினர். ஆகையால் ேஶஷத்வத்திற்குக் குறையில்லை. மற்றவைகளில் ஸ்வாதந்த்ர்யம் ஜீவருக்கு இல்லை யென்பதை 'ജഗദ്വ്യാപാരവർജം' என்கிற ஸூத்ரத்தினுல் ஸ்பஷ்டமாகத் தெரிவித்தார். ஆகையால் முக்த தசையிலும் ஜீவனுக்கு ேஶஷத்வம் இருப்பதோடு, அப்ருதக்ஸித்தமான பகவத் பாரதந்த்ர்யமும் ஸித்திக்கு மிறே. இதையே ஆழ்வான், 'ശുദ്ധസ്വരൂപത്വാവിർനിത്യം' என்று அருளிச்செய்தார். ஜீவனுக்கு முக்த தசையில் சொல்லும் 'സ്വാതന്ത്ര്യമതുലം പ്രാപ്യ തേനൈവ സഹ മോദതേ' என்று சொல்லிய ஸ்வாதந்த்ர்யமானது எப்படி யென்னில்: 'സ ഏകധാ ഭവതി, ത്രിധാ ഭവതി' என்று சொல்லியபடி, முக்தாத்மா தன் இஷ்டமான ரூபங்களை எடுத்துக்கொண்டு 'ഹാവു ഹാ' என்று ஸாமகானம் செய்துகொண்டு பகவத் கைங்கர்யம் செய்துகொண்டிருப்பதுதான். இதுவே முக்தாத்மாவுக்கு ஸ்வரூபம்.

பரமாத்மாவுக்கும் நமக்கு முள்ள இந்த ேஶஷ ேஶஷி பாவத்தையே, 'அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு' என்று பெரியாழ்வார் அறுதியிட்டார். இப்பாசுரத்தில் ஓர் அர்த்த விஶேஷம் தோன்றுகிறது. அது என்னவென்னில்:—இந்தப் பாசுரத்தில் ஜீவாத்மாக்களுக்கு ேஶஷேஶஷி பாவத்தைச் சொல்வதில் ஆழ்வாருக்குத் தாத்பர்ய மல்ல. இது ப்ரமாணுந்தரத்தால் ஸித்த மாகையால், இருவருக்கு முள்ள பிரியாமையைச் சொல்வதில் தாத்பர்யம். ஆனுல், 'பகவான் ேஶஷி, ஜீவன் ேஶஷன்' என்பதாலேயே இந்த ஸம்பந்தமும் நித்ய மென்று சொல்லப்படவில்லையோ வெனில், ஜீவர் ேஶஷராக இருந்தபோதிலும், 'ത്വം ശേഷം ശേ' என்றிராதே இந்தத் தாஸ்யம் பகவத் பர்யந்த மட்டுமே யல்லாமல் பாகவத பர்யந்தமா

யிருக்கவேணு மென்பதில் தாத்பர்யம். மேலும் அஜ்ஞானிகளிடம் கருணை கொண்டு, பகவான் 'உதாரா:' என்று சொன்னவனுகையாலும், 'ஸஹஸ்ரா ஸஹஸ்ரே' என்கிற அபிப்ராய முள்ளவனுகையாலும்,

'ஸௌஸ்ய-ஸசக்ஷுரமதிம் வஸஸம்வஸம்வா.........

ஸம்ஸுஜ்ஜைஸெகயய கொயஸாஸாரஹாவ: ॥'

என்பதுபோல் அஞ்ஜலி யென்பதின் அர்த்தமும் தெரியாமல் வஹ்ணாக்ஷர ந்யாயத்தில் அஞ்ஜலியைச் செய்து நிற்பவனுக்கு உபய விபூதியையும் கொடுத்து விட்டு, 'இவன் செய்த உபகாரத்திற்குக் கைம்மாறு நாம் ஒன்றும் ஸரியான படி செய்யவில்லையே!' என்று லஜ்ஜை கொள்ளும் பெரிய பிராட்டியாருக்கு நாத னுகையாலேயும், மஹாதயாஶாலி யானபடியால் இந்தப் பகவான் ஶேஷ ஶேஷி பாவத்தையும் வ்யத்யஸ்த மாக்கிவிடுவனே என்கிற அதிஶங்கையாலே பெரியாழ்வார் இந்த ஶேஷ ஶேஷி பாவம் குலையாமல் 'பல்லாண்டு பல்லாண்டு' என்று இப்பாசுரத்தால் பகவானை ப்ரார்த்திக்கின்ருர் என்றும் சொல்லலாம்.

இந்தத் திருப்பல்லாண்டு பத்துப் பாசுரங்களும் த்ரமிட வேதத்திற்கு ப்ரணவ ஸ்தாநத்திலிருந்து ஶாந்தி ரூபமாக இருக்கிறது. 'ஸஹ நாவவது' என்கிற ருக்கானது உபநிஷத்துக்கு ஶாந்தி ரூபமாக முதலில் அநுஸந்திக்கப் படுகிறது. இதிலும் ஆசார்யன் சிஷ்யன் இருவருக்கு முள்ள இடைவிடாத ஸம்பந்தம் சொல்லப்படுகிறது. 'நாம் இரண்டுபேரும் சண்டையிடாம லிருந்து குரு சிஷ்ய பாவத்தை விடாமல் அத்யயநம் செய்து தேஜஸ்விகளாக இருப் போம்' என்று இந்த மந்த்ரம் சொல்லுகிறது. இப்படி ஜீவாத்மாக்களுக்கு முக்த தசையிலும் பாரதந்த்ர்யம் கழியாது. எங்ஙனேயென்னில்: ஜீவாத்மாவானது 'யஸ்யாத்மா ஶரீரம்' 'தத்வஸம்வெஹஸ்ரேஷு நாம:' என்பதுபோல் பரமாத் மாவுக்கு ஶரீர மாகையாலே பாரதந்த்ர்யம் எப்பொழுதும் குலையாது. 'ஸ்வாதந்த்ர்ய தஸம்பூவத்' என்பதால் சொல்லப்பட்ட ஸ்வாதந்த்ர்ய ப்ரகாரம் முக்த ஜீவனுக்கு ஒருவிதமாக உண்டென்று முன்னமே கூறியுள்ளோம். சேத நாசேதநங்கள் பத்தருக்கு ஶேஷபூதங்களாக இருப்பதைக் காண்கிறோம். இவைகள் பகவானுக்கு எப்படி அநந்யார்ஹ ஶேஷபூதங்க ளென்றால், பத்தருக் குச் சேதநாசேதநர்கள் கர்மவிசேஷத்தாலே ஶேஷங்களாக இருக்கின்றன. அது கர்ம மடியாக வந்த ஶேஷத்வம். பகவானைத் தவிர்த்தவர்களுக்கு ஒன் றும் நிருபாதிக ஶேஷமல்ல. பகவானைப்பற்ற ஶேஷத்வமானது ஜீவாத்மா வுக்கு நிருபாதிகமானது; ஆகையால் விரோத மில்லை. இந்த ஶேஷ ஶேஷி பாவமானது, அகார உகார மகார ரூபமான ப்ரணவத்திலுள்ள உகாரத்தாலே சொல்லப்படுகின்ற தென்பது, 'உகாரொ நந்யாஹஸம் நியஸ்ய திஸம்பஸஸ ந யொ:' என்கிற ப்ரமாணத்தாலும், மற்றும் அநேக ப்ரமாணங்களாலும் ஸுப்ர ஸித்தம். இந்த ஶேஷத்வாநுஸந்தாநம் ஸ்வரூபஜ்ஞாந ப்ரதாந்யத்தாலே ஆத்மாவை உஜ்ஜீவிக்கச் செய்கிறது. ஆகையாலேயிறே ப்ரணவத்தில் தர்மி யைக்காட்டிலும் முற்பட தத்ஸம்பந்தம் ஶேஷியான பரமாத்மாவோடே

சொல்லப்பட்டது. ஶேஷியினுடைய ப்ரயோஜநமே எவனுக்கு ப்ரயோஜநமாக இருக்கிறதோ, அவன் ஶேஷனென்று சொல்லப்படுகிறான். இது ஒரு ஶேஷ லக்ஷணம். ஶேஷிக்கு ஓர் அதிஶயத்தை உண்டுபண்ண எண்ணமுள்ளவனாகையாலே இவன் உபாதேயனாய் ஶேஷனாகிறான். இதுவும் ஒரு ஶேஷ லக்ஷணம். இதை

'பரகதாதிஶயாதாநேச்சயா உபாதேயத்வமேவயஸ்ய
ஸ்வரூபம் ஸ ஶேஷ: பரஶ்ஶேஷீ'

என்று பூர்வாசார்யர்கள் அருளியிட்டார்கள். பகவதபிமதமான பாகவத ஶேஷத்வத்தாலே அந்யருக்கு ஶேஷனாக இருக்கை என்கிற தோஷமும் கிடையாது. இதைப் புருஷார்த்த காஷ்டாதிகாரத்திலே ஸ்வாமி தேசிகன் விஸ்தாரமாக அருளிச்செய்திருக்கிறார். இந்த நிருபாதிக ஶேஷத்வமானது ஜீவனுக்குப் பிராட்டியையும் பெருமாளையும் பெற்றது. 'ஶ்ரிய:பதிர் ஹ்ருஷீகேஶ:'' என்று சொல்லுகிறபடியால், பெருமாளைச் சொல்லுமிட மெங்கும் பிராட்டியையும் சொல்லும். இதை 'தஸ்ய ஸ்வாமித்வம் நவ்யப்ரத்யயஸ்யாத்ர திஷ்டதி' என்கிற அபியுக்தர்களுடைய ஸ்மர்த்தனைகளாலே அறியலாம். 'ஸ்வாமித்ய அஶேஷம் ஹி ஸ்வாதந்த்ர்யாதிகா' 'ஸ்வஸேநாதிபதயே' இத்யாதி ப்ராமாணங்களாலே பத்நீ ஸம்பந்தம் தோற்றுகிறது. ஸ்ரீ தேசிகனும், 'யந்மாம் தைவதம் ஏகம் தம்பதீ ந:' என்று அருளியிட்டார். ஹவிஸ்ஸுக்கு உத்யேச்யமான அக்நி ஸோமன் இந்த இரண்டு தேவதைகளுக்கும் ஒரே ஹவிஸ்ஸு ஸமர்ப்பணீய மாவதுபோல, இருவரையும் பற்ற இந்த ஜீவாத்மா ஶேஷபூதன் என்று ஸித்திக்கிறது.

ஸ்வயோக க்ஷேமத்தில் அபேக்ஷையில்லாத பெரியாழ்வார் பகவானைப் பல்லாண்டு பாடும்போது, 'அடியோமோடும்' என்பதால், 'தமக்கும் நித்ய யோகத்தை ப்ரார்த்திப்பதுபோல் தோன்றுகிறதே, இது அடுக்குமோ?' என்று கேட்கலாம். பகவானுடைய மங்களாஶாஸநத்தில் தாம் அங்கமாக இருப்பதாலும், ஶரீரிக்கு ஶரீரம் அதிஶயாதாயகமாக ஆகிறதுபோல, பரமாத்மாவினுடைய ஶரீரம் ஸுகமாக இல்லாவிட்டால் ஶரீரிக்கு அதிஶயம் ஏற்படாதாகையாலும், ஸ்வலாபாபேக்ஷையும் ஸ்வாமி லாபத்தில் பர்யவஸிக்கிறது என்கிற ந்யாயத்தின்படியே இவ்வாழ்வார் தம்முடைய நித்ய யோகத்தையும் ப்ரார்த்திப்பது விருத்த மன்று. 'நானுன்னை யன்றியிலேன் கண்டாய் நாரணனே நீ யென்னை யன்றியிலை' என்கிறபடி, இந்த ஸம்பந்தம் இருவருக்கும் அவர்ஜநீயம். 'நதஸ்ய ஶ்ரீவிநாபாவ:', 'ஶரீரஶரீரிணோ: அபாவ்ருத்தம்' 'ஶரீரவத்ஸ்வாம்யாதயோ' இத்யாதிகள் இங்கு விவக்ஷிதங்கள்.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ ஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர்

நிகழும் ஸர்வதாரி௵ தை௴ 15-ம்௳ (28—1—49) வெள்ளிக்கிழமை மாலை 4-மணிக்கு, காளி வங்கிபுரம் ஸ்ரீ. உப. V. ரங்காசார்ய ஸ்வாமி தலைமையில், சீர்காழி ஸ்ரீ. உப. ஜி. வரதராஜையங்கார் ஸ்வாமி, "நாம் செய்யவேண்டிய கடைமைகள்" என்னும் விஷயத்தைக் குறித்து உபந்யாஸம் செய்தருளினர். தலைவர் தமது முடிவுரையில் ஷை விஷயத்தை விஶதமாக உபந்யஸித்த பின்னர், காரியதர்ஶி வந்தனோபசாரம் கூற, ஸபை மாலை 6½ மணிக்கு முடிவடைந்தது.

ஸர்வதாரி௵ மாசி௴ 11-ம்௳ (22–2–49) செவ்வாய்க்கிழமை இரவு 8½-மணிக்கு, இவ்வூர் ஸ்ரீ. உப. T. A. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி தலைமையின்கீழ் மாயவரம் ப்ரவசந படு கதாப்ரவீண ப்ரஹ்ம ஸ்ரீ K. லக்ஷ்மீகாந்த ஶர்மா அவர்கள், "ஸ்ரீ பீஷ்ம ஸ்துதியும் ஸ்ரீ ஸஹஸ்ரநாம மஹிமையும்" என்பதுபற்றிச் சொற்பொழி வாற்றினர்கள். உபந்யாஸகர் தமது சொற்பொழிவில், பலனை எதிர்பார்த்துக் கர்மாவைச் செய்தல் கூடாதென்றும், ஐஹிகாமுஷ்மிகங்கள் இரண்டிலும் ஸுகத்தைக் கோருகிறவன், அந்த ஸுகத்துக்குக் காரணமான ஸத்கர்மாக்களையோ பகவதுபாஸனையையோ செய்யவேண்டுமென்றும், அந்த உபாஸநா தார்ட்யம் ஏற்படுவதற்குப் பால்யத்திலேயே ஸத்கர்மாக்களைப் பயிலவேண்டுமென்றும், பால்ய தஶையில் பகவத் விஷய வாஸனை ஏற்பட வேண்டி ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் மிகவும் அவச்ய மென்றும், அதை இந்த ஸபை ஒருவிதமான ப்ரதிப்ரயோஜநாதிகளையும் எதிர்பாராது செய்துவருவது மிகவும் பாராட்டத்தக்கதென்றும் கூறி முடித்தார். உபந்யாஸகருக்கு வேத கோஷங்களுடன் ஸந்மாநம் செய்யப்பட்டு இரவு 11-மணிக்கு ஸபை இனிது முடிவுற்றது.

மேற்படி உபந்யாஸகர் (23—2—49) புதன்கிழமை யன்று, இவ்வூர் ஸர்வமாந்ய அக்ரஹாரத்தில் த்ருவ சரித்ரம் என்னும் விஷயத்தைப் பற்றியும், (24—2—49) வியாழக்கிழமை யன்று கோமல் க்ராமத்தில் குசேலோபாக்யாநம் தக்ஷயஜ்ஞம் என்னும் விஷயங்களைப் பற்றியும், (26—2—49) வெள்ளிக்கிழமை யன்று ஸ்ரீ ருக்மிணீ கல்யாணம் என்பதைப்பற்றியும் உபந்யாஸம் செய்தருளினர். ஏராளமான ச்ரோதாக்கள் வந்திருந்து ச்ரவணம் செய்து பகவத் க்ருபைக்குப் பாத்ர மானர்கள்.

(14—2—49) திங்கட்கிழமை யன்று வடுவூர் ஸ்ரீ. K. துரைஸாமி அய்யங்கார் ஸ்வாமியின் குமாரர் ஸ்ரீ. உப. T. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி நம் ஸபைக்கு விஜயம் செய்து, குழந்தைகளின் ஸஹஸ்ரநாம பாராயண இன்னிசையில் ஈடுபட்டு, குழந்தைகளையும் ஆசீர்வதித்து, இம்மாதிரியான ஸபை நம் இந்திய நாட்டில் க்ராமங்கள் தோறும் பல்லாயிரமாகப் பெருகி, அதனால் நம் ஹிந்து ஸமூஹமும் மதாசாரங்களும் வேரூன்றவேண்டுமென்றும், நமது ஹிந்து கலாசாரங்களைக் காப்பாற்றவேண்டிய கடமை நம் சிறுவர்கள் கையில் இருக்கிற தாகையால் அவர்களை நல்வழிப்படுத்த வேண்டியது நமது முக்யமான கடமையென்றும், அதற்குத் தநவந்தர்களும் மடாதிபதிகளும் பூரண ஆதரவளிக்கவேண்டுமென்றும் கூறி, ஸபையிலுள்ள நூனிலயத்தையும் பார்வையிட்டு மகிழ்வுற்றார்.

நம் ஸபையின் மூன்ருவது நான்காவது வார்ஷிகோத்ஸவ வைபவத்தில் திருவழுந்தூர் வித்வான் ஸ்ரீ. உப. வரதராஜையங்கார் ஸ்வாமி செய்த பேராயிர முடையான் என்ற உபந்யாஸத்தில், கலியன் ச்ரிய: பதியைப் புகழுமிடத்து, 'பேராயிர முடையான்' என்றும், 'பேராயிரமும் பேசுமின்கள்' என்றும், 'ஓதி ஆயிர நாம முணர்ந்தவர்கள் உறுதுய ரடையாமல்' என்றும், 'பேராளன் பேரோதும் பெண்ணை மண்மேல் பெருந் தவத்தள்' என்றும், 'பேராயிரமும் பிதற்றிப் பெருந்தெருவே ஊராரிகழிலும் ஊராதொழியேன்' என்றும் ஸாதிப்பதால், ஸஹஸ்ர நாமத்தின் வைபவம் விவரித்தறிவித்தற்கு அரிதென்றும், இந்த ஸபை நிலைத்தோங்கி அழுந்தூர் அம்மானின் அருளுக்குப் பாத்ரமாகவேண்டு மென்றும் பேசி முடித்தார். வந்தநோபசாரங்களுடன் ஸபை இனிது முடிவுற்றது.

* * * * *

நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்த வளர்ச்சியில் நோக்க முள்ளவரும், தேரழுந்தூர் திவ்ய தேச பக்தர்களிடம் மிகுந்த அபிமாநம் காட்டிவரும் குடும்பத்தைச் சேர்ந்தவருமான சென்னை ஸ்ரீ. உப. S. ஆராவமுதையங்கார் ஸ்வாமி சென்ற (3—3—49) வியாழக்கிழமை காலை 10-10-மணிக்குத் தமது திருமாளிகையில் ஆசார்யன் திருவடி யடைந்தா ரென்ற செய்தி கேட்டு வருந்துகின்ரேம் அவரது ஆத்மா சாந்தியடையுமாறு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ப்ரார்த்திக்கிரேம்.

கடாம்பி R. நரஸிம்ஹாசார்யர்

[ஸ்ரீ. வி. ஸ. ஸபைக் கார்யதர்சி]

* * * * *

ஸ்ரீமத் கருடபுரம் ஸ்வாமியின் வார்ஷிகாராதந மஹோத்ஸவம்

நாளது விரோதிஞு சித்திரைமீ 2உ (14-4-49) வியாழக்கிழமை க்ருஷ்ண த்விதீயை யன்று, ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி கருடபுரம் ஸ்ரீ. ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனுடைய நான்காவது வார்ஷிக ஆராதந மஹோத்ஸவம், ஸர்வதாரிஞு பங்குனிமீ 28உ (10-4-49) ஞாயிற்றுக்கிழமை யன்று ஆரம்பித்து ஸ்ரீ வேதபாராயண திவ்ய ப்ரபந்த ஸேவை முதலியவைகளுடன் ஐந்து நாள் மஹோத்ஸவமும், ஐந்தாவது நாளாகிய க்ருஷ்ண த்விதீயை யன்று (14—4—49) ஸம்பாவனை ஸ்ரீ பாதுகாதீர்த்த விநியோகங்களுடன் ஷை ஆராதந மஹோத்ஸவம், ஸ்ரீ மதுராந்தகத்தில் ஸ்ரீமத் ஸ்வாமியின் பூர்வாச்ரம திருமாளிகையில் கருடபுரம் சின்ன ஸ்வாமி ஸ்ரீ. உப. தி. ஈ. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியை முன்னிட்டுக்கொண்டு நடத்துவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறபடியால், ஷை மஹோத்ஸவத்துக்கு ஸ்ரீமத் ஸ்வாமி சிஷ்யர்களும், ஸ்ரீ ஸ்வாமியினிடம் ப்ரதிபந்நர்களும் எழுந்தருளிக் கைங்கர்யத்தில் அந்வயித்து க்ருதார்த்தர்க ளாகவேணுமாய் ப்ரார்த்திக்கிரேம்.

ஸ்ரீமத் ஸ்வாமி குமாரர்கள்:—

தி. ஈ. வரததேசிக தாஸன்

தி. ஈ. திருமலை தாஸன்

[தேரடிவீதி, மதுராந்தகம்]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

நிகழும் ஏப்ரல் மீ". 3வ. ஞாயிற்றுக்கிழமை தினம், ஸ்ரீ மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத பாடசாலையின் ஏழாவது வார்ஷிகோத்ஸவத்தை நடத்துவதாக ஸ்ரீ அழகியசிங்கருடைய நியமனத்தை முன்னிட்டு அவ்விடத்தில் ஸம்விதானங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஹைகோர்ட் ஜட்ஜ் ப்ரஹ்ம ஸ்ரீ ஏ. வி. விச்வநாத சாஸ்த்ரியார் அவர்கள் தலைமை வஹிக்க அநுமதித்திருக்கிறார்கள். ஸ்ரீ. உ. வே. வி. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி உபந்யாஸம் செய்யத் திருவுள்ளம் பற்றியிருக்கிறார். மத்யாஹ்நம் 3½-மணிக்கு ஸதஸ் உபக்ரமமாகலாம். ஆஸ்திகர்கள் எல்லாரும் அக்காலத்தில் அவ்விடம் எழுந்தருளி ஸதஸ்ஸை நடத்தி வைக்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ மதுராந்தகம் பாடசாலையின் வார்ஷிகக் கோண்டாட்டம்

* * * *

ஸ்வல்ப காலமாக நம்முடைய ஸமூஹத்தாருள் சிலர், ஸம்ஸ்க்ருத பாஷையின் மீது நிஷ்காரணமாக ஓர் ஆக்ரஹம் கொண்டு, அதற்கு லோபத்தை எவ்விதம் அடைவிக்கலாமென்று பஹுவிதமாக ப்ரயத்நப்பட்டு வருகிறார்கள். ஆனால் அவர்களுடைய ப்ரயத்நம் அவ்வளவாகப் பயன் பெறவில்லை. அவர்களுடைய கூட்டத்தைச் சேர்ந்த சில பெரியோர்கள் ஸம்ஸ்க்ருதத்தின் மஹிமையை நன்றாய்த் தெரிந்துகொண்டு, 'அதை நசிப்பிப்பது தம்முடைய நன்மைக்கும் மிகவும் விருத்தம்' என்பதைத் தமது உபந்யாஸங்களாலும் பத்ரிகைகளில் எழுதுவதைக் கொண்டும் பலமாகத் தடுத்துவருகிறார்கள். அவர்கள் ஆக்ரஹமற்று வாதம் செய்வதாலும், லௌகிக அந்தஸ்த்தில் உயர்ந்த பதவிகளை அவர்கள் பெற்றிருப்பவர்களாயிருப்பதாலும், அவர்களுடைய வாதத்தை எதிர்ப்பதற்கு ஸம்ஸ்க்ருத விரோதிகளின் சக்தி அபர்யாப்தமாகிவிட்டது. நிற்க: வட தேசங்களிலும் அநேக இடங்களில் அநேக பெரியோர்கள் ஸம்ஸ்க்ருத பாஷையின் மஹிமையை உணர்ந்து, அந்தப் பாஷையின் அபிவ்ருத்திக்கு அபேக்ஷிதமான ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள். சில விடங்களில் ஸம்ஸ்க்ருத ஸர்வகலாசாலை (Sanskrit University) களும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன; அவற்றின் பரிபாலநத்திற்கு த்ரவ்யங்களும்

ஸம்ஸ்க்ருதக் கல்வியின் ஸ்திதி

ஏராளமாகச் சேர்க்கப்பட்டு வருகின்றன. இம்மாதிரியான முயற்சிகளும் ஸம்ஸ்க்ருத விரோதிகளின் ப்ரயத்நத்தைப் பலஹீநமாகச் செய்துவிட்டன. ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கும் நிலையைக்கொண்டு நாம் எவ்வித முடிவையும் செய்யக்கூடாது. நம்முடைய ஸஹ்ருத்துக்களின் அந்தஃகரணத்தில் ஸம்ஸ்க்ருத த்வேஷம் வேரூன்றியிருக்கிற தென்று நாம் நினைக்க இடமுண்டு. தைவத்தின் கதி எப்படி முடியுமோ? ‘ ஹதியஜாதா உஜாததயா ’

* * * *

டெல்லியில் ‘ ஹிந்து லா ’ திருத்தத்தைப்பற்றிய சட்டம் வஹுவாக மஹா ஜநங்களால் விசாரிக்கப்பட்டு வருகிறது. அநேக கூட்டங்களில் இந்த ‘ ஹிந்து லா ’ மசோதாவைப் பலமாகக் கண்டித்து அநேக பெரியோர்கள் பேசியிருக்கிறார்கள். டாக்டர் பட்டாபி ஸீதாராமையா என்னும் காங்க்ரெஸ் ப்ரெஸிடெண்ட், இந்தத் திருத்தத்தைப் பலமாக ஆக்ஷேபிக்கிறார். அவர் காங்க்ரெஸ் கூட்டத்தைச் சேர்ந்தவராயிருக்கையிலும், மத விஷயங்களில் சட்ட ஸபையார் ப்ரவேஶித்துச் சட்டம் செய்வது மிகவும் ஆக்ஷேபகரமென்றும், ஹிந்து ஸமூஹத்தாரிடமே சட்டத்தின் மாறுதல்களை விட்டுவிடவேண்டுமென்றும், கால ஸ்திதியை அநுஸரித்து ஹிந்து ஸமூஹத்தில் சட்ட மாறுதல்கள் வேண்டுவன வென்பது அவச்யமானாலும், அம்மாறுதல்களை அந்த ஸமூஹத்தாரே செய்துகொள்ளவேண்டுமே யொழிய சட்ட ஸபையார் இது விஷயத்தில் ப்ரவேஶிக்கக்கூடா தென்றும் பலமாக வாதித்தார். இன்னும் சில பெரியோர்கள், இந்த மசோதாவை நிறைவேற்றச் சட்ட ஸபைக்கு அதிகாரமில்லை யென்றும், இந்தத் திருத்தம் நிறைவேற்றப்பட்டால் பண்டைக் காலம் தொடங்கி ஹிந்துக் குடும்பங்களில் நடைபெற்றுவரும் வைலக்ஷண்யம் சீரழிந்துவிடு மென்றும் வஹுவாக வாதித்தார்கள். அநேக ஸ்த்ரீகளும் இந்த ஆக்ஷேபத்தில் சேர்ந்துகொண்டார்க ளென்பதைக் கேட்க நமக்கு ஸந்தோஷமா யிருக்கிறது.

ஹிந்து லா சீர்திருத்தம்

இப்போதிருக்கும் ‘ ஹிந்து லா ’ மாற்றப்படாமற்போனால், ஹிந்துக் குடும்பங்கள் சீரழிந்துவிடு மென்றும், அதிலும் ப்ராஹ்மண குடும்பங்கள் நஶித்துவிடு மென்றும், சட்டத்தைக் கொண்டுவருகிறவர்கள் வாதிக்கிறார்களாம். பெரும்பாலும் ப்ராஹ்மணர்கள் இந்த லோகத்து வாழ்க்கையில் உயர்வையே தேடுபவ ரல்ல ரென்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள் போலும். மேனாட்டார் சேர்க்கை ஏற்பட்ட பிறகே ஆங்கில பாஷை படித்தவர்கள் சிலர் அம்மாதிரி உயர்வைத் தேடிவந்தார்களே யொழிய, ஶரீர பலத்தாலோ த்ரவ்ய பலத்தாலோ ஜனக் கூட்ட பலத்தாலோ ப்ராஹ்மணர்கள் இந்த லோகத்தில் உயர்வை அடைய நினைத்தவ ரல்லர். அவர்கள் வேதத்தையே ப்ரமாணமாகக் கொண்டு இவ்வுலகத்து ஐச்வர்யாதிகளில் அதிகப் பற்றில்லாமல் வாழ்க்கையை நிர்வஹித்து வந்தவர்கள்; தாநம் வ்ரதம் தபஸ் முதலிய காய க்லேஶங்களையும், யஜ்ஞம் முதலிய கர்மங்களையும், ஸ்வதர்மமாகச் செய்பவர்கள். அவைகளையும் ஸகல ஜநங்களுடைய க்ஷேமத்தின் பொருட்டே தம்து கஷ்டத்தைக்

கொஞ்சமேனும் பாராட்டாமல் நடத்தி வருபவர்கள். ஆகையால் இப்போது சட்டம் திருத்தம் பெறுமல், சில ப்ராஹ்மண வாலிபர்கள் இந்த லோகத்தில் உயர்வை அடையத் தவறிக் கொஞ்சம் கஷ்டப்பட்டாலும், முடிவில் அவர்களுடைய ஸமூஹமானது ச்ரேயஸ்ஸையே பெறு மென்பதில் ஆக்ஷேப மில்லை. ஆகையால் இந்தக் காரணத்தைக் கொண்டு ப்ராஹ்மணச் சிறுவர்களைச் சட்டத் திருத்தக் கக்ஷியில் சேர்க்க முயல்வது வீண் ப்ரயத்ந மாகும்.

*   *   *   *

ஸ்ரீமத் ராமாயணத்தில் பின்வருமாறு ஒரு வாக்யம் காணப்படுகிறது:—

‘ தஸ்ய ப்ராதா து வைமாத்ரோ லக்ஷ்மணோ நாம வீர்யவாந் ।
ஸுமித்ராநந்தவர்த்தந: ப்ர வ்ரஜந்தம் த்வயா ஸஹ ॥ ”

இதில் ‘ வைமாத்ர: ’ என்று ஒரு பதம் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. ‘ ஸ்ரீ வால்மீகி பகவான் இந்தப் பதத்தையே இவ்விடத்தில் ப்ரயோகித்தாரா ? இல்லாவிட்டால் வேறு பதம் ப்ரயோகிக்கப்பட்டு, அது பிறகு மாறியிருக்கிறதா ? இந்தப் பதத்தின் ரூபம் வ்யாகரண விதிகளுக்கு ஒத்திருக்கிறதா ? இல்லாவிட்டால் அவைகளுக்கு ஏதாவது ஓர் அம்சத்திலாவது விருத்தமா ? ’ என்னும் இம்மாதிரியான விசாரம் ஒன்றுண்டு. ஆனால் அதன் நிஷ்கர்ஷம் எப்படி யென்று தெரியவில்லை.

த்வை மாத்ர சப்த விசாரம்

முதலில் வால்மீகியால் விவக்ஷிதமான பொருளை இந்த ‘ வைமாத்ர ’ பதம் வ்யக்தமாக விளக்கவில்லை யென்பது ஒரு கக்ஷி. இந்தப் பதத்துக்கு ‘ஸபத்நீ மாதாவின் குமாரன்’ என்பது பொருள். லக்ஷ்மணன் ஸபத்நீ மாதாவின் குமாரனுக இருக்கையிலும், ‘ தமது தமையன் வனத்துக்குப் போகுங் காலத்தில் தாம் அவருக்குக் கைங்கர்யம் செய்துகொண்டு அவருடன் கூடப் போகாமல் எதற்காக உயிரை வைத்துக்கொள்வது ? ’ என்னும் ஆவேகத்துடன் தாமும் ஸகலத்தையும் துறந்து கூடப் புறப்படுமாறு அவ்வளவு ப்ரீதி தமது ப்ராதாவிடம் அவர் வைத்திருக்கிறு ரென்பதை வெளியிடவேண்டு மென்பதே மஹர்ஷியின் கருத்து. இல்லாவிட்டால், ‘ லக்ஷ்மணன் ஸபத்நீ மாதாவின் புத்ரன் ’ என்னும் உறவை மஹர்ஷி இவ்விடத்தில் வற்புறுத்தக் காரண மில்லை. உலகத்தில் ஸபத்நீ மாதாக்களின் ப்ரஜைகளுக்குள் ப்ராயேண த்வேஷம் தென்படுகிறதே யொழிய, லக்ஷ்மணன்போல் ஸகலத்தையும் பரித்யஜித்து ப்ராதாவுடன் தாமும் வனவாஸம் போகத் தீர்மானிக்கு மளவு அன்பு தென்படவில்லை. இந்தக் கருத்து த்ருடமாக வெளியாம்படி இந்தப் பதத்தில் ஒருவித ஆகார விசேஷமும் இல்லை யென்று சொல்லலாம். யத்நேந அந்தத் தாத்பர்யத்தைக் கல்பிக்கலா மானுலும், இதைக் காட்டிலும் தெளிவாகவும் நல்ல தார்ட்யத்துடனும் இந்தக் கருத்தை வெளியிடும் வேறு பதமொன்று இருக்கும் பக்ஷத்தில், அதையே இவ்விடத்தில் மஹர்ஷி ப்ரயோகித்திருக்கவேண்டு மென்று சொல்லிக்கொண்டு, சிலர் ‘ ஸௌமாத்ர: ’ என்னும் ஒரு பாடாந்

தாத்தைப் படிக்கிறார்கள். ‘வைமாத்ர:’ என்பதற்கு ‘விஷமாயா மாதுரபத்யம் புமாந்’ [வேறுபட்டிருக்கும் தாயின் குமாரன்] என்பது வ்யுத்பத்தி யானதால், இந்தப் பதமே விவக்ஷிதமான அர்த்தத்திற்கு அதிக ஶக்தியைக் கொடுப்பதாகச் சொல்லக்கூடும். ஆனால் ஸ்ரீமத் ராமாயணத்துக்கு வ்யாக்யாநம் செய்திருப்பவர்களுள் ஒருவர் நீங்கலாக மற்றை ஒருவரும் இம்மாதிரி பாடாந்தர மொன்றுண்டு என்று உபக்ஷேபிக்கவே யில்லை. மிகவும் ப்ரஸித்த வ்யாக்யாதாவாகிற ஸ்ரீ கோவிந்தராஜர், இதையே சரியான பாடமென்று வைத்துக்கொண்டு இந்தப் பதத்துக்கு உரையெழுதுங் காலத்தில், இந்தப் பதத்தில் மற்றும் சிலரால் சொல்லப்படும் வ்யாகரண தோஷங்களுக் கெல்லாம் ஸமாதாநத்தைச் சொல்லி இந்தப் பதத்தை ஸாதிக்கிறாரேயொழிய, வேறொரு பாடம் இருப்பதாகவும் அதை அங்கீகரிக்கலா மென்றும் சொல்லவே யில்லை. இதைப் பார்த்தால் ஸ்ரீ கோவிந்தராஜர் காலத்தில் இந்தப் பாடாந்தர வார்த்தையே இல்லை யென்றும், அவருக்குப் பிற்காலத்தில் யாரோ ஒருவர் இதை ஸ்ருஷ்டித்திருக்கவேண்டு மென்றும் தீர்மானிக்கத் தோன்றுகிறது. ‘ஏன் இம்மாதிரி ஒரு பாடாந்தரத்தைத் தேடுவதில் ப்ரவ்ருத்தி ஏற்பட வேண்டும்?’ என்று ஒரு ப்ரச்நம் செய்யலாம். ‘த்வைமாத்ர:’ என்னும் பதத்தில் வ்யாகரணப் பிழைகள் இருக்கின்றன வென்பதே அதற்குக் காரணம். ‘அந்தப் பிழைகள் யாவை? அவைகளுக்கு ஸ்ரீ கோவிந்தராஜர் முதலிய வ்யாக்யாதாக்கள் என்ன ஸமாதாநம் சொல்லியிருக்கிறார்கள்? அம்மாதிரியான தோஷமற்றதா இந்தத் திருத்தக்காரர்கள் ஏற்படுத்தும் பாடாந்தரம்?’ என்பவை இப்பொழுது விசாரத்துக்கு ப்ராப்தமாகின்றன.

முதலில், ‘த்வை மாத்ர’ பதத்தின் ரூபத்தினுடைய ஶுத்தியை விசாரிப்போம். வ்யாகரண விதிகளை உள்ளபடி ப்ரயோகித்துப்பார்த்தால், ‘த்வயோர்மாத்ரோரபத்யம் புமாந்’ [இரண்டு தாய்களுக்குப் பிள்ளையாக இருப்பவர்] என்று வ்யுத்பத்தி செய்தல் வேண்டும். அப்பொழுது ‘த்வைமாதுர:’ என்றே ரூபம் கிடைக்கும்; ‘த்வைமாத்ர:’ என்று ரூபம் கிடைக்கமாட்டாது. வ்யாகரண ஶாஸ்த்ரத்தில் ‘அபத்யாதிகாரம்’ என்று ஓர் அதிகார முண்டு. அதில், தகப்பன் பெயரை யிட்டுப் பிள்ளையை வ்யவஹரிக்க வேண்டுமானால், அந்தத் தகப்பன் பெயரில் என்னென்ன மாறுதல்கள் செய்யப்படவேண்டு மென்பது விளக்கப்படுகின்றது. உதாஹரணம்: ‘கணபதேரபத்யம் புமாந்’—‘காணபத:’ [கணபதி என்பவனுடைய பிள்ளையைத் தகப்பன் பெயரையிட்டு வ்யவஹரிக்கும்போது அந்தப்பிள்ளையை ‘காணபத’ என்றே சொல்லவேண்டும்.] இதில் இரண்டு மாறுதல்கள் முக்யமாகத் தெரிகின்றன. அவை:—1. பதி யென்னும் இகாராந்தம் அகாராந்தமாக மாறுதல்; 2. ‘க’ என்பதிலுள்ள ‘அ’ என்னும் உயிரெழுத்து ‘ஆ’ என்று தீர்க்கமாக மாறுதல். இந்த மாறுதல்களை ‘அண்’ ப்ரத்யயம் என்று ஒரு விகுதி அபத்யார்த்தத்தில் வருகிற தென்றும், அதன் பலமாக ஆதியிலுள்ள உயிரெழுத்து ‘வ்ருத்தி’யை அடைகிற தென்றும் சொல்வார்கள். இந்த மாறுதல்களைத் தவிர்த்து, ‘அண்’ ப்ரத்யயத்தின் பயனாக வேறு சில மாறுதல்களும் சிற்சில பதங்களுக்கு

ஸம்பவிக்கு மென்று சொல்லும் வேறு விதிகளும் உண்டு. 'த்வைமாத்ர' என்னும் ஶப்தம் 'த்வி' 'மாத்ரு' என்னும் ஶப்தங்களிலிருந்து கிடைக்கிறது. அந்த 'த்விமாதா'க்களின் பிள்ளையை வ்யவஹரிக்குங் காலத்தில் கீழே சொல்லி யிருக்கிறபடி 'மாத்ரு' என்பதிலுள்ள ருகாராந்தம் உகாராந்தமாகவும் 'த்வி' என்னும் அக்ஷரத்திலுள்ள 'இ' என்னும் உயிரெழுத்து வ்ருத்தியாகிற 'ஐ' ஆகவும் மாறுதல்கள் அடையும். இவை மாத்ரம் மாறுதல்களாக இருந்தால், 'த்வைமாத்ர' என்னும் ரூபம் ஸித்திக்கும். இந்த ரூபமே மஹர்ஷியால் ப்ரயோகிக்கப்பட்டிருக்க, ஏன் அதை அபத்த மென்று சொல்லுகிறார்க ளென்றால், ஒரு பதத்தின் ரூபத்தை விசாரிக்குங் காலத்தில், அந்த ரூப ஸித்தியில் என்னென்ன விதிகள் விதிக்கப்பட் டிருக்கின்றனவோ, அவை யெல்லாவற்றையும் பார்த்து நிர்ணயம் செய்ய வேண்டு மன்றோ? இந்தப் பத விஷயத்தில் வேறு சில விதிகள், இன்னும் வேறு சில மாறுதல்களை விதிக்கின்றன. அவைகளை யெல்லாம் விசாரித்து, இந்த ஶப்தத்தின் ரூபம் எப்படி மாறவேண்டு மென்பதை நிர்ணயித்தால், அது 'த்வைமாதுர:' என்று மாறவேண்டு மென்றே ஏற்படும். 'ஷாண்மாதுர:' என்னும் ஸுப்ரஹ்மண்யனுடைய பெயர் போல. இந்தக் காரணத்தால்தான் மஹர்ஷியின் ப்ரயோகம் அஸாது வென்று சொல்லப்படுகிறது. இதை வ்யாக்யாநம் செய்யுமிடத்தில் ஸ்ரீ கோவிந்தராஜர் இந்தப் பிழையை ஆர்ஷ மென்று ஸமாதாநம் சொல்லி விட்டுப் போயிருக்கிறார்.

இந்த 'த்வைமாத்ர' என்னும் பாடத்தைத் தவிர்த்து, 'வைமாத்ர' என்னும் பாடாந்தரத்தைச் சிலர் சொல்லுகிறார்களே; அதில் வ்யாகரணப் பிழைகள் இல்லையோ வென்றால், அதிலும் இம்மாதிரி ஒரு தோஷம் இருக்கின்ற தென்றே நாம் அறிகிறோம். 'விஹிநாயா மாதுரபத்யம் வைமாத்ரு' என்பது அதன் வ்யுத்பத்தி. அப்பொழுது கீழ் விவரிக்கப்பட்டுள்ள ஸாமாந்ய விதிகளின் படி 'வைமாத்ர' என்று ரூபம் ஸித்திக்கும். ஶாஸ்த்ரம் அதனுடன் நிற்கவில்லை. 'விமாத்ரு' என்னும் ஶப்தத்தைத் தனியாக எடுத்து 'இந்த ஶப்தத்திற்கு அபத்யார்த்த 'அண்' ப்ரத்யயம் வரமாட்டாது' என்று அந்த ஶாஸ்த்ரம் விதித்திருக்கிறது. அந்த 'அண்' ப்ரத்யயம் வராவிட்டால் 'மாத்ரு' என்பது 'மாத்ர' என்று மாறமாட்டாது; வேறு சில மாறுதல்களும் வேறு விதிகளால் ஸம்பவி கின்றன. அப்பொழுது இந்தப் பதம் 'வைமாத்ரேய:' என்று மாறுகின்றது. ஆகையால் இந்தப் பாடாந்தரத்தை அவலம்பிக்கின்றவர்கள் வ்யாகரணப் பிழை வாராத ரூப மொன்று தமக்குக் கிடைக்கிறதென்று பாடாந்தரத்தை ஆச்ரயிப்பதில் அதிக லாப மில்லை இதை வ்யாக்யாநம் செய்பவர்களும், இதை ஆர்ஷ மென்றே ஸமாதாநம் செய்திருக்கிறார்கள்.

வேறு சில வையாகரணர்கள், இந்த இரண்டு பதங்களில் தென்படும் தோஷங்களுக்கு வேறு விதமாக ஸமாதாநம் சொல்லுகிறார்கள்: 'அண்' ப்ரத்யயம் இருவகைப்பட்டது. அபத்யார்த்தத்தைக் குறிக்கும் 'அண்' ஒன்று; அபத்யார்த்தத்தைக் குறிக்காமல் ஸாமாந்ய ஸம்பந்தத்தைக் குறிக்கும்

'𑌅𑌣𑍍' ப்ரத்யயம் மற்றென்று. அப்பொழுது விக்ரஹம் '𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑍋𑌰𑌪𑌤𑍍𑌯𑌂-𑌦𑍍𑌵𑍈𑌮𑌾𑌤𑍁𑌰𑌃' என்று நிற்கும். இந்த ஸாமாந்ய '𑌅𑌣𑍍' வருங்காலத்தில், '𑌦𑍍𑌵𑍈𑌮𑌾𑌤𑍃𑌕𑌃' என்பதில் வந்த மாறுதல்க ளெல்லாம் இங்கும் வந்துவிடுமோ வென்று பயப்படவேண்டிய தில்லை. ஸாமாந்ய '𑌅𑌣𑍍' ப்ரத்யயமாக வருகை யில் கடைசியி லிருக்கும் உயிர் மாறி அகாராந்தமாக வருவதும், ஆதிவ்ருத்தி ஸம்ப விப்பதும் உண்டு. மற்றை ஆதேஶம் முதலியவை வரமாட்டா வாகையால், '𑌦𑍍𑌵𑍈𑌮𑌾𑌤𑍃' ஶப்தம் நிர்த்துஷ்டமே. இதுதான் இவர்கள் சொல்லும் ஸமா தாநம். இப்படி ஸமாதாநம் சொல்வது ஶாஸ்த்ர ஸம்மதமாக இருக்கும் பக்ஷத்தில், 'ஏன் ஸ்ரீ கோவிந்தராஜர் முதலான ப்ரஸித்த வ்யாக்யாதாக்கள் இந்த ஸமாதாநத்தைச் சொல்லி ஸமர்த்தியாமல் ஆர்ஷ மென்றும் சாந்தஸ மென்றும் பரிஹாரத்தைச் செய்திருக்கிறார்கள் ?' என்னும் கேள்வி நிருத் தரமாக நிற்கும். அவர்களுக்கு '𑌤𑌸𑍍𑌯𑍇𑌦𑌮𑍍' என்னும் ஶாஸ்த்ர விதி அஜ்ஞாதமாக இருந்த தென்று சொல்லத் துணிவோமோ ?

'𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑍋𑌃' என்று வ்யுத்பத்தி செய்து, அதற்கு 'இரண்டு தாய்கள்' என்று பொருள் கொண்டு, 'இரண்டு தாய்கள் எப்படி ?' என் னும் ஸங்கடத்தை எழுப்பிக்கொண்டு, அதைத் தீர்க்க க்லேஶப்படுவதைக் காட் டிலும், '𑌦𑍍𑌵𑍈𑌮𑌾𑌤𑍃' என்னும் விஷயத்தில் வேறு வ்யுத்பத்தி யுண்டென்று வேறு சிலர் சொல்லுகிறார்கள். அவர்களுள் அடையாறு லைப்ரெரியி லுள்ள ஸ்ரீ. உப. வி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி ஒருவர். அவரிடம் இதைப்பற்றி ப்ரஸ்தாவிக்க நேர்ந்தது. அவர் சொல்வது மிகவும் த்ருப்திகரமாக இருக்கிற படியால், அதை இவ்விடத்தில் வெளியிடுகிறோம். அவர் சொல்லும் வ்யுத்பத்தி யானது, '𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌮𑌾𑌤𑌾-𑌦𑍍𑌵𑌿𑌮𑌾𑌤𑌾; 𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌅𑌯𑌮𑍍' என்பது தான். '𑌦𑍍𑌵𑌿𑌮𑌾𑌤𑌾' என்ப தற்கு 'இரண்டு தாய்கள்' என்று அர்த்தம் கொள்ளாமல், '𑌦𑍍𑌵𑌿' என்பதற்கு '𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾' என்று பொருள் சொன்னால், 'இரண்டாவது தாய்' என்று பொருள் கிடைக்கும். 'இரண்டு தாய்கள்' என்று சொல்வதால் ஏற்படும் க்லேஶ மில்லை. அபத்யார்த்த '𑌅𑌣𑍍' ப்ரத்யயம் இல்லாததால், வேறு ப்ரத்யயம் முதலியவைகளால் ஏற்படும் ஸங்கட்டு மில்லை. ஸ்ரீ க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ஸங்க்யா வாசக ஶப்தங்களுக்கு வ்ருத்தி விஷயத்தில் பூர்ணார்த்தத்வம் உண் டென்பதற்குக் கணக்கற்ற த்ருஷ்டாந்தங்களை உதாஹரிக்கின்றார். அவைக ளுள் ஒன்றை மாத்ரம் சொல்லிவிட்டு அதனுடன் விரத ராகிறோம். தேவதை களை '𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑌾𑌃' என்று வ்யவஹரிக்கிறோம். இதற்கு, '𑌤𑍍𑌰𑌯𑍋 𑌦𑌶𑌾 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇' என்று விக்ரஹம் சொல்லாமல், '𑌤𑍃𑌤𑍀𑌯𑌾𑌦𑌶𑌾 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇' [எவர்க ளுக்கு மூன்றாவது தஶை மாத்ரம் உண்டோ அவர்கள் த்ரிதஶர்கள். அதா வது: அவர்கள் நித்ய யுவாக்கள்; யௌவந தஶை ஒன்றே அவர்களுக்கு] என்பது தாத்பர்யம். இவ்விடத்தில் '𑌤𑍍𑌰𑌿' என்னும் ஸங்க்யா வாசக பதத் திற்கு '𑌤𑍃𑌤𑍀𑌯' என்னும் பூரணார்த்தம் சொல்லுகிறோ மன்றோ ? அது போலவே '𑌦𑍍𑌵𑍈𑌮𑌾𑌤𑍃' என்னும் பதத்திலுள்ள '𑌦𑍍𑌵𑌿' என்பதற்கும் '𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯' என்று பூர்ணார்த்தத்தைச் செய்துகொள்கிறோம். ஶாஸ்த்ரஜ்ஞர்கள் ப்ரமாணம்.

9257

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு

[21-2-49—20-3-49]

			ரூ.
14	ஸ்ரீ.	N. S. சாரி, பம்பாய் 1 (49)	3
26	,,	V. V. ஐயங்கார், பம்பாய் (49) ...	3
27	,,	R. L. நாராயணன், கல்கத்தா (49) ...	3
50	,,	S. ராமஸ்வாமி, பம்பாய் 1 (49) ...	3
64	,,	V. ரங்காசார்யர், B. A., ஸ்ரீரங்கம் (49) ...	3
67	,,	T. G. பிச்சுவையங்கார், திருக்குறுங்குடி (49)	3
93	,,	R. லக்ஷ்மணன், பண்டிட், R. D. S. காலெஜ், மதுரை (49)	3
120	,,	செல்லம்மாள், தேனும்பேட்டை, சென்னை (49)	3
169	,,	C. M. வேங்கடராகவன், ஹைதராபாத் (49)	3
284	,,	K. N. தேசிகாசாரியர், திருவெவ்வுளூர் (48)	3
294	,,	I. ஸ்ரீநிவாஸாசாரியர், சைதாப்பேட்டை (49)	1
333	,,	முத்துவிஜயவெங்கடாசலபதி ரெட்டியார், கூட்டேரிப்பட்டு (49)	3
388	,,	D. வேதாந்தாசாரியர், கல்கத்தா (49)	3
441	,,	T. ஸ்ரீநிவாஸையங்கார், அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர் (48—49)	6
486	,,	N. V. சாரி, கோட்டை, பம்பாய் (49)	3
560	,,	R. S. ஐயங்கார், கல்கத்தா (49)	3
562	,,	A. நரஸிம்மாசார்யர், கல்கத்தா (49)	3
596	,,	S. R. ஸ்ரீநிவாஸாசார்யர், திருப்பனந்தாள், தஞ்சை (49)	3
603	,,	T. வேதாந்தாசாரியர், B. A., மயிலாப்பூர் (49)	3
631	,,	சேட்லூர் T. கோபாலாசார்யர், Post Gadi Bero Dt. Munbham (49)	3
648	,,	வேதவல்லியம்மாள், கொடவாசல் (49)	3
654	,,	ராவ்ஸாஹிப் S. ராமஸ்வாமி ஐயங்கார், R.N. Pet, நெல்லூர் (48—49)	6
675	,,	K. G. ஸந்தானம் ஐயங்கார், கும்பகோணம் (49)	3
676	,,	K. S க்ருஷ்ணஸ்வாமி, P.W.D. Draftsman, தஞ்சாவூர் (49)	3
677	,,	வானமாமலை வெங்கடரங்காசார்யர், மாதுங்கா, பம்பாய்(48)	3
727	,,	T. N. தாதாசார்யர், சாமராஜபேட்டை, பெங்களூர் 2 (49)	3
767	,,	T. ராஜகோபாலாசார்யர், திருவஹீந்த்ரபுரம் (49)	3
809	,,	K. கோபாலக்ருஷ்ணமாசார்யர், அக்ரஹாரம் குண்டூர் (49)	3
833	,,	A. C. ஸ்ரீநிவாஸாசார்யர், B.A., B.L., கோபாலபுரம், சென்னை (49)	3
834	,,	P. N. ஈச்வர (ராமாநுஜ) ஐயர், சாலாபுரம், கள்ளிக்கோட்டை (49)	3
		மொத்தம் ரூ.	94

குறிப்பு:—சென்ற மாஸத்துச் சந்தாப் பட்டியலில் 294. ஸ்ரீ ஐ. ஸ்ரீநிவாஸாசார்யர் ரூ. 2/- 1949-50க்குச் சந்தாச் செலுத்தியதாதக் குறிக்கப்பட்டிருப்பது தவறு. ஷெ சந்தாத் தொகை 1949ம் வருஷத்திற்கே. [ஸ-ர்]

Regd. M. 4437.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 APR 1949
MADRAS

ஸ்ரீ:

தமிழகத்தில் சிறுவர்கட்கும் ஏனையோர்க்கும் வைதிக
லௌகிக வ்யவஹாரங்களைப் போதிப்பதில்
முன்னணியில் நிற்கும்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா.

இது இமய முதல் குமரிவரை ப்ரசுரமாகிவரும் ஒரு மாதப் பத்ரிகை.

இதில் எத்தகைய விளம்பரங்களும் தெளிவாகவும் சுத்தமாகவும்
அழகாகவும் குறைந்த சார்ஜில் செய்துகொடுக்கப்படும்.
விளம்பர விஷயங்களும், அதன் சார்ஜும்,
கீழே காணப்படும் விலாஸத்துக்கு
அனுப்பப்படவேண்டும்.

விளம்பரங்களுக்கு ஆர்டர்கள் தேவை.

[குறிப்பு] முன் பணம் அனுப்பப்பட்டாலன்றி விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்பட மாட்டா.

சார்ஜுகளின் விவரம்:—

ராப்பர் வெளிப்புறம்	பக்கம் 1-க்கு	மீ 1-க்கு	ரூ. 20.
,, உட்புறம்	,,	,,	ரூ. 15.
ஸஞ்சிகையின் உட்புறம்	,,	,,	ரூ. 10.

ஒப்பந்த (CONTRACT) விளம்பரங்களுக்குக் கட்டணம்
இன்னும் குறைவாகும்.

இங்ஙனம்:

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், மதராஸ்-17.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Edited and Published by S. Vasudevacharia, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.